April. 1914.

உ

Reg. No. M. 1080.

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

TAMILIAN.

A Monthly Tamil Journal.

Pandit, S. Muthuswami Pillai, Managing Editor.

Vol. II. | 1089 பங்குனி | No. 7.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	மாதசரிதம்	193
2.	பூணூல்	195
3.	பிரகிருதிசாஸ்திரவளர்ச்சி	199
4.	அச்சியந்திரமும் அதன் வளர்ச்சியும்	204
5.	தமிழபிமானிகட்கோர் விண்ணப்பம்	209
6.	சமுதாய ஒற்றுமையும் தமிழ்ப் பாஷையும்	211
7.	சமாசாரத்திரட்டு	217

Printed at the 'Bhaskara' Press, and
Published by S. Muthuswamy Pillai, Trivandrum.

ரோஜா.

சீருலாவிய செந்தமிழ் பரவும் இப்பரதகண்டத்தில் வசிக்கும் புத்திர புத்திரிகளின் மனதைச் சீர்திருத்தவும் புருஷனுக்கும் மனைவிக்கு மிருக்கவேண்டிய மனோரம்மியத்தை அவர்கள் மனதில் புகட்டவும் இப்புத்தகம் இன்றியமையாதது.

இதில் விளங்குவதெல்லாம் படிப்பவர் நாவிற்கு நயமும், கேட்பவர் காதிற்கு இன்பமும், மனதிற்கு உற்சாகமும் தருவதுடன் அறிவை விருத்தியாக்கி மாதர்கட்கு ஊழ்வினைசம்பந்தமே முதற்காரணமாயிருந்து சுகதுக்கமுண்டாகுமென்பதுணராமல் துக்கமுண்டாகுங்காலை கடவுளை துஷித்து வீணிற் பழிசுமப்ப தடாத வழுவெனக் கற்றுணர்ந்த கவிஞர்கள் புகலும் நீதி சாஸ்திர மனைத்தும் இன்னும் அநேக இன்றியமையா விஷயங்களையும் சேர்த்துக் கடிதங்களாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 8. தபாற்கூலி பிரத்தியேகம்.

ஆநந்த மகிளா.

இப்புஸ்தகம் அநேக படங்களடங்கியது.

விலை தபால் சார்ஜ் உள்பட ரூபாய் 1. 0. 0.

இது மானிட உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதமெனும் சஞ்சீவியேயாகும். ஹிந்து ஸ்திரீ புருஷர்களுக்கு பிரியத்தையும் சந்தோஷத்தையுங் கொடுக்கத்தக்கது. ஸ்திரீ புருஷ சம்பந்தமான சாஸ்திரங்களையும் சரீர கோட்பாட்டையும் பூர்வத்தில் ஆரியர்கள் அனுஷ்டித்து வந்த முறையை இப்புஸ்தகம் விவரித்துச் சொல்வதோடு கூட ஆண் பெண் இவ்விரண்டு ஜாதியும் ஒருவரையொருவர் தமதுஇஷ்டப்பிரகாரம் சந்தோஷ சல்லாபஞ் செய்துகொள்ளும் விதத்தையுந் தெளிவாய் எடுத்துரைப்பது. மூன்று புஸ்தகங்களுக்கு ஒரு புஸ்தகம் இனாம்.

P. S. Roy
PONDICHERRY.

தமிழன் சந்தாவிவரம்.

	ரூ	அ	பை.
போஷகர்களுக்கு	4	0	0
சந்தாதார்க்கு	2	0	0
பினாங்கு சிங்கப்பூர்முதலிய வெளிநாடுகளுக்கு	3	0	,,

குறிப்பு, (1)முதல் ஆறு மாதங்களுக்குள் ஒரு வருஷ சந்தா முன்னதாகச்செலுத்தும் சந்தாதார்க்கும் போஷகர்களுக்கும் 8 அணா விலையுள்ள “கற்பகவல்லி” என்னும் நாவல் ஒரு பிரதி இனாமாகக்கொடுக்கப்படும்.

Pandit S. Muthuswami Pillai. Managing Editor.
The “TAMILIAN” Trivandrum.

உ

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு"—குறள்.

பண்டிதர் S. முத்துசுவாமிப்பிள்ளை—பத்திராதிபர்.

தொகுதி II } 1089. பங்குனி மீ { பகுதி VII

மாதசரிதம்.

சென்ற மாதப் பத்திரிகையில் வெளியிடப் பெற்ற விண்ணப்பத்தின்படி சந்தாத் தொகை அளித்து உபகரித்த போஷகர்களுக்கும் சந்தாதார்களுக்கும் மிக நன்றி பாராட்டுகிறேன். பாக்கியுள்ளவர்களும் இப்படியே மாதந்தோறும் அனுப்புவார்களானல் எனக்குப் பெரும் உதவியாயிருக்குமென்று சொல்லவேண்டியதில்லையே.

இம்மாதத்திலும் "தமிழன்" ஒரு உதவியாளரைப் பெற்றுன். இராமனுதபுரம் ஜில்லா கொத்தமங்கலம் ஸ்ரீமாந் C. A. C. காசிநாதன் செட்டியாரவர்கள் "தமிழனை" எவ்வழியானும் ஆதரிப்பதாக வாக்களித்திருக்கின்றனர்.

விஷயதானம் செய்வோருக்கு எத்தனையோ முறை மன்ருடி எழுதியும் ஒரு பயனும் உண்டாகவில்லை. ஆகையால் அடியில் வரும் விஷயங்களைப் பற்றி வியாசங்கள் எழுதியனுப்புவோருக்குச் சிறிது பொருளுதவி செய்ய உத்தேசித்திருக்கிறோம்.

நாம் விரும்பும் விஷயங்களாவன:—

1. கைத்தொழில், விவசாய, வர்த்தக விஷயங்கள்.

2. சரித்திரீக, சாஸ்திரீக (Scientific) உபந்யாசங்கள்.

3. இந்து தேசத்தின்கண் உள்ள புண்ணிய க்ஷேத்திரங்கள், சரித்திர விஷயமாகப் புகழ்ப்பெற்ற புராதன ஸ்தலங்கள், வியாபாரஸ்தலங்கள் இவைகளைப் பற்றிய சுருக்கமான விவரணங்கள்.

4. புராணபுருஷர்களின் சுருக்கமான சரித்திரங்கள்.

5. ஜீவித்திருக்கும் மஹான்களின் சரித்திரங்கள்.

6. விநோதமான நூதனக் கதைகள்.

7. வைத்தியர்களின் அநுபவ முறைகள்.

8. நூதனக் கவிகள்.

இவ்விஷயங்கள் எல்லாம் காகிதத்தின் ஒரு புறத்தில் சிறுவர் சிறுமிகளும் வாசிக்கக்கூடிய தெளிவான எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கவேண்டும். நீடித்த நாவல் முதலியவைகளுக்குப் பிரத்தியேக ஏற்பாட்டின்பேரில் பொருளுதவி செய்யப்படும். பொருளுதவி பெற்ற விஷயங்களின் சகல உரிமைகளும் நமக்கேயாகும்.

நமது பத்திரிகாபிமானிகளெல்லாம் இவ்விஷயத்தை விஷயதானம் செய்ய சக்தியுடையவர்கள் யாவருக்கும் தெரிவிப்பார்களென்று நம்பப்படுகிறது.

பத்திராதிபர்.

பூணூல்.

உபவீதம் அல்லது பூணூல் என்பது ஆரியரில் இரு பிறப்பாளராகிய பிரம்ம க்ஷத்திரிய வைசியர்களால் தரிக்கப்பட்ட முப்புரி நூல். அது இடது தோளிலிருந்து தங்கியிருக்கும்படி தரிக்கப்படும். அதின் நீளம் இவ்வளவு இருக்கவேண்டுமென்று கத்தியாயனர் கூறியிருக்கின்றனர். மனுதரும சாஸ்திரப்படி பூணூல் பிராமணர்களுக்கு நாலினாலும், க்ஷத்திரியர்களுக்குப் பட்டினாலும், வைசியர்களுக்கு ஆட்டுமயிர் முதலியவைகளாலும் செய்யப்பட்டிருக்கவேண்டும். துறவிகள் தமது அகம் பழுத்ததென்று தோன்றுமாறு புறத்தைப் பழுப்பு நிறமுள்ள காவியுடையால் மூடுகிறார்கள். அதுபோல் அகத்தே நூலாராய்ச்சியுள்ளோரென்பது தோன்ற பூர்வீகர் புறத்தே மார்பில் நூல் தரித்துக் கொண்டனர். ஆதிகாலங்களில் ஆரிய இருபிறப்பாளர், முக்கியமாய் பிராமணர்கள், அவ்வித நூலாராய்ச்சியுள்ளவராயிருந்தனர். ஆகையினால் அதை தரிக்க உரிமையுடையவராயிருந்தனர். தற்காலத்திலோ சதுர் மறைகளின் நாமதேயமும் தெரியாவிடினும் அதை தரிக்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது.

ஆரிய சாஸ்திரங்களின்படி, ஆரியரில் இரு பிறப்பாளராகிய பிரம்ம க்ஷத்திரிய வைசியர் மாத்திரம் தரிக்க நியாயமுண்டு. திராவிடர்களுக்கு அப் பூணூல் தரிக்க எவ்வித நியாயமும் உரிமையும் கிடையாது. திராவிடதேசங்களில் மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியர்களுக்கு பூணூல் சம்மந்தம் ஒன்றுமில்லாதபடியினால் அதை அவர்கள் ஒருபொழுதும் தரிக்கவே இல்லை. கி. மு. ஒன்று இரண்டாவது நூற்றாண்டிலிருந்த தொல்காப்பியர் என்பவர் தனது தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் 626-வது பாடலில் தமிழகத்தில் அதைப் பிராமணர்கள் மட்டும் தரிக்க உரிமையுடையோர்களென்று சொல்லியிருக்கிறார்.

"நூலே கரக முக்கோல் மணையே
யாயும் காலை யந்தணர்க் குரிய."

மேற்படி பாடலுக்கு யாவரும் மற்ற திராவிடர்களைக் குறித்த வேறு பாடல்களில் பூணூல் சங்கதியே எடுக்கவில்லை.

கி. பி. ஏழாவது நூற்றாண்டில் இருந்த பேர்பெற்ற திவாகரர் திவாகரம் என்னும் நூலில் பிராமணர்களை அடியில் வருமாறு வரைந்திருக்கின்றனர்.

ஐயர் வேதியர் இருபிறப்பாளர்,
மெய்யர் மிக்கவர் மறையோர் பூசுரர்,
அந்தணர் நூலோர் அறுதொழிலாளர்,
செந் தீவளர்ப்போர் உயர்ந்தோ ராய்ந்தோர்,
ஆதிவருணர், வேதபாரகர் விப்பரர்
தொழு குலத்தோர் வேள்வியாளர்,
முப்புரிநூலோர் முனிவரென் றிவை,
தப்பில் பார்ப்பார் தம்பெயராகும்."

இப்பாடலில் "முப்புரிநூலோர்" அதாவது மூன்று இழையுள்ள நூல் தரிப்போர் என்கிற நாமம் பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கி. பி. 12-வது நூற்றாண்டிலிருந்த நமது ஔவையார் "நூல்" என்கிற பதத்தை பிராமணர்களை குறிப்பிக்க அடியில் கண்ட பாடலில் உபயோகப்படுத்தியிருக்கின்றனர்.

"நூலெனிலோ கோல்சாயு நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ வாங்கே குடிகாயும்—நாலாவான்
மந்திரியுமாவான் வழிக்குத் துணையாவான்
இந்த வரசே யரசு".

கி. பி. 16, 17-வது நூற்றாண்டிலிருந்த கீர்த்தி பெற்ற மண்டல புருடர் சூடாமணி நிகண்டில் பிராமணர்களை அடியில் கண்ட மாதிரி சொல்லியிருக்கின்றனர்.

"ஐயர் வேதியரே நூலோ ரறு தொழி லாளராய்ந்தோர்
மையில் பூசுரரே செந் தீவளர்ப்பவர் தொழுகுலத்தோர்
பொய்யிலந்தணரே யாதிவருணர் முப்புரி நூன்மார்பர்
மெய்யர் விப்பிரரே வேதபாரகர் வேள்வியாளர்."

இதில் "முப்புரி நூன்மார்பர்" அதாவது முவ்விழை நூலை மார்பில் அணியப்பட்டவர் என்பது பிராமணர்களுக்கு ஓர் பெயராக கொடுக்கப்பட்டிருக்கிறது. திவாகரரும் மண்டலபுருடரும் மற்ற ஜாதியார்களைப் பற்றி சொல்லும்போது சங்கதியே சொல்லாமல் அவர்கள் அதற்கு உரியவர் அல்லவென்று நீக்கிவிட்டிருக்கிறார்களென்பதை இவ்விடத்தில் கவனிக்கவேண்டும்.

"ஆறுகெட நாணலிடு ஊருகெட நூலை விடு" என்கிற பழமொழியில் கூட "நூல்" அதாவது நூலை தரிப்பவர் என்பது பிராமணர்களை குறிக்கின்றது.

ஆகையால் தென்னிந்தியாவிலிருக்கும் திராவிடர்கள் பூணூல் தரிக்க எவ்வித பாத்தியமும் இல்லாதவர். மேல் குறித்த சங்கதிகளால் அவர்கள் சென்ற சுமார் 300 வருஷம் வரையில் பூணூல் தரித்ததேயில்லை யென்று தெரிகிறது. வட ஆர்க்காடு மிஸ்டர் ஸ்டுயர்ட் துரை எழுதிய நூலில் சுமார் 50 வருடத்திற்கு முந்தித் தான் வன்னியர்கள அதை தரிக்க ஆரம்பித்தனர் என்று கூறியிருக்கிறார். சாணார், ராஜு ஜாதியார், சேடர், காணம் முதலிய ஜாதிகள் இப்பொழுது தான் அதை தரிக்க ஆரம்பித்தது, நமக்கு நன்றாய்த் தெரியும்.

பௌத்த மதமும் சமண மதமும் துரத்தப்பட்ட பிறகு ஆரிய வருணாசிரமங்களை திராவிடர்களுக்குள் பிராமணர் உற்பத்தி செய்த போது "பூணூல்" தமிழகத்தில் முதல் முதல் தோன்றிற்று. அது வலங்கை இடங்கை ஜாதிகளையும் அவர்களுடைய கலகங்களையும் உற்பத்திசெய்தது. அவ்வித கலகங்களை இவ்விடத்தில் சுருக்கிச் சொல்லுவோம். ஆக்ஷேபனையுள்ள தமிழரசர்களின் உதவியினால் தமிழகத்தில் பிராமணர்கள் ஆரியவருணாசிரமங்களை ஸ்தாபிக்க முயன்ற போது ஐக்கியமின்மை, ஒழுங்கின்மை, பகை, முதலியன ஒரு வம்சத்தராயிருந்தவர்களும் இதுவரையில் சமாதானமாய் வாழ்ந்துவந்தவர்களுமான திராவிடர்களுக்குள் தோன்றின. எந்த திராவிடனும் மற்ற திராவிடர்களைவிட தாழ்ந்த ஜாதியிலிருக்க உள்ப்படவில்லை "பறையர்" என்போரை எளிதில் ஏற்படுத்திவிட்டனர். பௌத்த மதத்தைச் சேர்ந்து வேதத்தை நம்பாதவர்களானபடியினால் ஆரியர் கோட்பாட்டின்படி "சண்டாளர்" ஆயினர். மனுதர்மசாஸ்திரத்தில் சண்டாளன் கிராமத்திற்கு வெளியேயிருக்கவேண்டும். அவனுக்குப் பாத்திரங்கள் கிடையா, நாய்கள்தான் அவனுக்கு சொத்து, அவனுடைய உடுப்பு பிணங்களின் மேலிருக்கும் துணி, அவனுடைய போசனபாத்திரங்கள் உடைந்த சட்டிகள் என்று சொல்லியிருக்கிறது. அந்தசாஸ்திரப்படி "பறையர்கள்" என்போரை எளிதில் தாழ்த்திவிட்டனர்.

பின்னர் கம்மாளர்களிடத்தில் பிரவேசித்தபோது எல்லா சங்கடங்களும் உற்பத்தியாயின. மனுதர்ம சாஸ்திரப் பிரகாரம் தச்சர்கள் முதலிய கம்மாளர்கள், வாணியர், வைத்தியர்கள் முதலியவர்

அசுத்தியானவர். ஆனதுபற்றி ஆரியநாட்டில் இவர்கள் தாழ்ந்தவர்களாக எண்ணப்பட்டபடியினால் ஆரியர்கள் அல்லாத மற்றவர்கள் இவ்வகைத் தொழில்களை செய்துவந்தார்கள். பிராமணர்கள் கம்மாளர்களைத் தொடப்படாதவர்களாக ஏற்படுத்த முயன்றார்கள். இதினால்தான் இடக்கை வலக்கை ஜாதிகளும் அவைகளின் கலகங்களும் தோன்றின. கம்மாளனுடன் வாணியனும் செட்டியும் கோமுட்டியும் வைசியராக வேண்டுமென்று சேர்ந்துகொண்டார்கள். இவர்கள் "பூணூல்" தரிக்கவேண்டுமென்றார்கள். இவர்கள்தாம் இடங்கை ஜாதியாராயினர். பிராமணர்களும் பூணூல்வேண்டாமென்ற திராவிடர்களும் வலங்கை ஜாதியாராயினர். இம்மாதிரியாக பூணூல் முகாந்திரமாகவே இக்கலகங்கள் நடந்தன, தேசமானது நெடுங்காலம் பெரிய குழப்பத்திலும் ஒழுங்கின்மையிலும் முழுகியது. கடைசியில் ஆங்கிலேய கவர்ன்மெண்டார் தோன்றி இக்கலகங்களை ஏறக்குறைய அடக்கிவிட்டனர்.

இப்பொழுது ஆங்கிலேய அரசாட்சியில் இம்மாதிரி கலகங்கள் நடக்க வழியில்லையென்று தெரிந்து ஒவ்வொரு ஜாதியானும் மாம்சம் சாப்பிட்டுக்கொண்டிருந்ததை விட்டுவிடுகிறதும் பூணூல் புதிதாய் தரிப்பதும் வைசியர் என்று பெயர் வைத்துக்கொண்டு மற்றவர்களை விட மேலானவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறதுமாக இருக்கிறார்கள். தென்னிந்தியாவில் கூடும் ஒவ்வொரு ஜாதி சங்கங்களும் தங்கள் ஜாதி சிறந்ததென்றும் தாங்கள் வைசியரென்றும் க்ஷத்திரியரென்றும் சொல்லி மேலாவதற்கு பிரயத்தனப்படுவதால் பற்பல ஜாதிகளுக்குள் அன்பு குறைகிறது. இப்படி மேல்ஜாதியாராக விரும்புகிறவர்கள் தங்கள் நடத்தையினால் ஒற்றுமைக்கேட்டை உண்டுபண்ணுகிறார்கள். அறிவுள்ள திராவிடர்கள் இம்மாதிரி காரியங்கள் செய்வது தகுதியல்ல. திராவிடர்கள் பூணூல் தரிப்பதும் வைசியன் அல்லது க்ஷத்திரியரென்று சொல்வதும் நியாயமல்லவென்று நன்றாய் மனதில் தெரிந்திருக்கவேண்டும்.

D. Gopal Chetty.
Editor, "New Reformer"
MADRAS.

பிரகிருதி சாஸ்திர வளர்ச்சி.

பரீக்ஷணங்களாகிய கற்களைப் பகுத்தறிவாகிய சாந்திஞேடு சேர்த்துக் கட்டப்பட்டதும் விசாலமானதும் மிகுந்த கம்பீரமான தோற்றமும் உடைய பல்வகையான உட்பிரிவுகளாகிய மண்டபங்களை யுட்கொண்டதாய்க் கண்டோர் எளிதில் பிரமிக்கத்தகுந்த பிரமாண்ட மாளிகையாகிய நவீன சாஸ்திரத்தின் மகிமை அதினின்னருளிலேயே அமர்ந்திருக்கும் நமக்கு நன்கு புலப்படுவதரிது. வெயிலில் செல்லும் பொழுதே நிழலினருமை செவ்வனே தெரியவருவதுபோல், நாம் தற்காலம் அனுபவிக்கிற சௌகரியங்களையும் இயற்கைத் தோற்றங்களிடத்து நமக்குண்டாயிருக்கிற நுண்ணறிவினையும் வெறுத்து, மிருகத்தினின்றும் மிகுந்த வேறுபாடில்லா ஆதிமனிதனுக்கு அமைந்திருந்த கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டால் மட்டுமே தற்கால சௌகரியங்களின் உண்மை மகிமையை நாம் செவ்வையா யறிந்துகொள்ளுவோம்.

பிரகிருதியினிடத்துக் காணப்படுகிற ஆவிர்ப்பவங்களைப் பற்றிய தற்காலநுண்ணறிவின் பயனாக இயற்கைத் துணைகள் (natural resources) மேல் ஓர் அடக்கத்தையும், இயற்கையின் நடைகளிடத்து இணையற்றதோர் உட்பார்வையையும் நாமடைந்திருக்கிறோம்.

சத்திநூலின் (Physics) சுவாதீனத்தில் தற்காலம் ஏற்பட்டிருக்கிற இயந்திரவகையான திராணிகளோடொப்பிட்டுப் பார்க்குமிடத்து சில காலங்களுக்குமுன் இணையற்ற உபயோகமுடையவை என்று கணிக்கப்பட்டுவந்த ஆயுதங்கள் வாகனங்கள் முதலியனவெல்லாம் சிறுவர் களிக்கும் ஆடற்பண்டங்களளவே தோன்றுகின்றன. கண்ணிற்குத்தென்படாததாயினும் நம்முடைய நுண்ணறிவு விரைந்து செல்லக்கூடியவைகளாகிய விசாலமான சாலைப்பாதைகள் பதார்த்தங்களின் அணுக்களுக்கிடையில் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அணுக்களானவை ஒரே நிலையாயிராமல் எப்பொழுதும் சஞ்சாரமுடையதாய் சூரியமண்டலத்தில் காணப்படுவதுபோலவே ஒன்றையொன்று எண்ணரிய வேகமோடு சுற்றி வருகிறதாகவும் இந்த சாஸ்திரமே பரீக்ஷணங்களால் சாக்ஷியப்படுத்தியிருக்கிறது.

உயிர்நூல் (Biology) அடைந்திருக்கும் வெற்றிகளும் அவ்வண்ணம் வியக்கத்தக்கனவே. ஆச்சரியகரமான ஜீவச்சிறுபிராணிகளின்

இயற்கையமைப்பினைப்பற்றிய நூதனகோட்பாடுகள், நூதனகற்பனை கள், பலவற்றை இந்நூல் வளர்ச்சியின் பயனாயடைந்திருக்கிறோம்.

மனிதனின் கண்ணுக்கிலக்காகாது அவனுடைய நுண்ண றிவிற்கும் அணுதரிசினிக்கண்ணாடிக்கும் மட்டுமே எட்டுகிறதும், மனிதன் முதலிய பிராணிகள் பலவற்றிற்கும் நன்மை தீமைகளை இயற்றத்தக்க வல்லமை உள்ளதும், அணுப்பரிமாணமாகிய வினோ தவடிவுகளையும் உடைய சிற்றுயிர்கள் எண்வகையிரண்டிலும் ஏராள மானவை என்று உயிர்நூலோர் கண்டிருக்கிறார்கள். நம்மை வருத்து கிற வியாதிகள் பலவும் இவ்வகைத்தாய சிற்றுயிர்களின் செய்கை யென்றும், வியாதியின் முடிவு இவ்வுயிர்களின் முடிவை யொட்டியது என்றும் கூறப்பட்டிருக்கின்றது. நாம் சற்றேனும் அயிர்க்காத இடங் களிலும் இவ்வகைவுயிர்கள் ஏராளமாய் காணப்படுகின்றன. உண் டியொடு கலந்து கொள்ளுகிறதும் மிகப் பரிசுத்தமானவையென்று கணிக்கப்படுகிற பஞ்சகவ்வியங்களில் ஒன்றுமாகிய தயிர் நாம் நினைத்துக்கொள்வதுபோல் நிஷ்கபடமாயதல்ல, அதினுள்ளும் மேற் கூறியவகைத்தாய உயிர்கள் கோடானு கோடிகள் குடிகொண்டி ருக்கின்றன. ஆனால் இவை மனிதனுக்கு நன்மையையே செய் கின்றன என்று மெச்னிகாப் (Metchnikoff) என்ற சாஸ்திரக்ஞர் கூறுகிறார். இவ்வுண்மையையுணர்ந்துபோலும் நம்முன்னோர்களும் தயிர் உண்டிக்கு இன்றியமையாததென்று கொண்டனர்.

தற்கால நாகரீகம், அந்நாகரீகத்திற்கு பூதகாரணமாகிய சாஸ் திர அபிவிருத்தி ஆகிய இவைகளுடைய உண்மை மகிமையைச் செவ் வனே அறிவதற்கு இயற்கைதத்துவ சாஸ்திரவளர்ச்சியின் சரித்திரத் தைக் கவனித்தலின்றியமையாதது. ஏனைய கலைகளோடு இயற்கை சாஸ்திரத்திற்கு ஏற்பட்டிருக்கிற சம்பந்தங்களையும் இனிமேல் இஃது அடையக் கூடியவளர்ச்சியையும் நன்றாய்க் கவனிப்பதும் அவசியம். மேலும் இறுதியாகிய எல்லையை அடைந்து விட்டோம் என்று சாஸ்திர வளச்சியின் ஒவ்வோரு பருவத்திலும் நம்முன்னோர்கள் நம்பிப் பின்னர் ஏமாந்துபோனதை நன்கு கவனித்து நாமும் அந்தப் பிழைக்கே ஆளாகாமல் காத்துக்கொள்ளவும் வேண்டும்.

வளர்ச்சிக் கோர்முடிவில்லையென்ற உண்மை சாஸ்திரவளர்ச் சிக்கே நன்குபொருந்துவது. தற்காலம் வழங்கப்படுகிற கற்பனைக ளும் கோட்பாடுகளும், இன்னும் சில வருஷங்களுக்குள் அடியோடு மாறுபட்டு விடுதல் அசாத்தியமன்று.

மூலவஸ்துக்களுள் (Elements) ஓர் வகை மற்றோர் வகையாக மாறுதல் அசாத்தியமான காரியம் என்று இயற்கை சாஸ்திரக்ஞர் சென்ற சில நூற்றாண்டுகளாக நம்பிவந்தார்கள். இதுபற்றியே செம்பு முதலிய சாமானிய லோகங்கள் எக்காலத்தும் எவ்வகை முயற்சியாலும் பொன்னாவதில்லை என்பது இவர்களுடைய கோட்பாடு. ஆயின் சில வருஷங்களுக்குமுன் கியுரீ (Madame Curie) என்ற பாரஸீயச் சீமாட்டியொருவரால் கண்டுபிடிக்கப்பட்ட 'ரேடியம்' (Radium) என்ற நூதன மூலாதாரவஸ்துவின் தன்மைகள், மூலாதாரவஸ்துக்களின் மாறுபாடின்மையை யொட்டிய மேற்கூறிய கோட்பாட்டினை சற்றுப்பலமாகவே அசைத்துவிட்டது. தற்காலம் நாம் மூலாதாரவஸ்துக்கள் என்று கணித்து வருகிறவைகள்யாவும் உண்மையில் மூலாதாரமானவையல்லவென்றும், இவைகள் ஆதியாக ஒரே வஸ்துவினின்றும் உற்பத்தியாயின என்றும் இன்னும், சில வருஷங்களுக்குள் ஓர் நூதன கற்பனை ஏற்படுமாயின் நமக்கு அது எவ்வகை வியப்பையும் தரவேண்டியதில்லை. அத்தகையதோர் நூதன கற்பனை இயற்கை சாஸ்திரக்ஞர்களின் உடன் பாட்டை இன்னும் சில வருஷங்களில் கட்டாயப்படுத்தும் என்பது விலக்கவொண்ணாத காரியமே என்றும் தோற்றுகிறது.

சாஸ்திரவளர்ச்சி யிவ்வகைத்தாக, என்றும் நிலைத்திருக்கிற பிரகிருதியை நிலையற்றவைகளாகிய கற்பனைகளினின்றும் வேறு பிரித்தறிதல் இன்றியமையாதது. சிருஷ்டிநாளில் தனக்கு ஏற்பட்ட அமைப்பினின்றும் ஓர் அணுவளவேனும் மாறுபாடடைந்ததன்று பிரகிருதி. அது ஆதிமுதல் ஒரே இயல்பைக் கொண்டது. அதினிடத்துக்காணப்படும் தோற்றங்களும் எவ்வகை மாறுபாடையும் அடைந்தனவல்ல. பிரகிருதியின் ஆவிர்ப்பவங்கள் அன்று அமைந்தவாறே இன்றும் காணப்படுகின்றன. ஆயின், வெவ்வேறு அங்கங்களையும் தொட்டுநோக்கிய குருடர்கள் யானையைப் பற்றி வெவ்வேறு அபிப்பிராயங்களடைந்தது போல், மனிதர்களும் இவ்வாவிர்ப்பவங்களினியல்பை தங்கள் தங்கள் அறிவுணர்ச்சிக்கு எட்டியவாறு ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொரு வகையாக எண்ணிவந்தார்கள்.

சாஸ்திர அறிவின் அங்குரங்கள் தோன்றத்துடங்கிய ஆதிநாட்களில் சாஸ்திரீய அறிவானது தெளிவான கிளைகளாய்ப் பிரிக்கப்படவில்லை. அக்காலத்தில், புரோகிதர்களே தத்துவஞானிகள்; அவர்களே சிகிச்சாகர்த்தர்கள்; அவர்களுக்கே பிரகிருதி சாஸ்திரப் பயிற்சியுமிருந்தது.

பிரகிருதி சாஸ்திரத்திற்கும் மற்றைய சாஸ்திரங்களுக்கும் ஏற்பட்டிருக்கிற வேறுபாடுகள் ஆதியில் கவனிக்கப்படவில்லை. பிரகிருதி சாஸ்திரம் செயற்படுத்தக்கூடியது; மற்றவைகள் அவவாறுயதன்று. பிரகிருதிசாஸ்திரமானது ஐம்பொறிகளின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளக்கூடிய வஸ்து (matter) வையே கவனித்து நிற்க, தத்துவநூல் போன்ற மற்றை நூற்கள் முக்கியமாக யூகார்த்தமாயமைந்தவை.

நாளடவில் வெவ்வேறு கிளைகிளாய்ப் பிரிக்கப்படவே சாஸ்திரப்பயிற்சி வளர்வடைய நேரிட்டது. சாஸ்திரவளர்ச்சிக்கு முதற்காரணமாயமைந்தவை அதனை தக்ககிளைகளாய் பிரிப்பதும், அப்படி பிரிக்கப்பட்ட தனிவகையொன்றையும் செவ்வனே தெரிந்து தனித்தனியாய் அபிவிருத்தி செய்வதுமேயாம்.

கிரீஸ்தேசத்திலும் அதின் அக்கம்பக்கத்திலும் முந்நாட்களில் சாஸ்திரப்பயிற்சி ஒருவாறு கையாடிவரப்பட்டது. ஆனால், கிரேக்கர்கள் கலைஞானங்கள் (Sciences) யாவற்றையும் தேவசாஸ்திரத்தினின்றும் (Theology) வேறு பிரித்தனர் எனினும், பிரகிருதிசாஸ்திரத்தை தத்துவஞானத்தினின்றும் வேறுபிரித்தனரில்லையாதலின் நாம் தற்காலம் அறிந்திருக்கிற உண்மைகள் அவர்களுக்குச் சற்றேனும் தென்படாமலே போயிற்று. கண்டறிந்த இரண்டொரு காட்சிகள் (phenomena) ஆகிய அடிவாரமீது கிரேக்க தத்துவஞானியின் பரபரப்பான மனமானது செயற்படுத்தற்கிசையாத சில யூகங்களைக் கொண்டே பிரமிக்கத்தக்கதாகிய மண்டபம் இயற்றியது. ஆனது பற்றியே, ஒரேவகை யாவிர்ப்பவங்களைப் பற்றி எதிரிடையான கற்பனைகள் பலவற்றை அவர் அங்கிகரித்து வந்தார்கள். பதார்த்தம் (matter) ஆனது ஒரே தொடற்சியாக அமைக்கப்படாமல், பல் கோடியளவான பல்வேறு அணுக்களின் கூட்டமேயாம் என்பது இவர்தம்முள் ஒருசாரார்கொள்கையாயிருக்க, இனியொரு சாரார் வஸ்து ஒரே தொடர்ச்சியாயமைக்கப்பட்டது என்றகோட்பாட்டை அங்கீகரித்தனர். இவ்விருகற்பனைகளுள்ளும் உண்மையானது எது என்று ஐயம் நீங்க அறிவதற்கு வேண்டிய வல்லமையில்லாது போயினர்.

ஆனால் இக்கிரேக்கர்கள் சில கலைகளைமட்டும் சரியான வழியாகக்கையாடிவந்தார்கள். அக்காலத்தில் செயற்படுத்தற்கு செளகரியங்களிருந்த சாஸ்திரவகைகளை அவர்கள் நன்றாய் வளர்ச்சியடையச்செய்ததாகக் காணப்படுகிறது. நிலத்தை யளந்தறிவதற்கு

மிருந்த சௌகரியத்தை தந்தமையால், இரேகாகணித சாஸ்திரமானது (Geometry) பிரத்திபக்ஷமான சில சுயப்பிரமாணங்களைமட்டுமே ஆதாரவாகக் கொண்டு வளர்ச்சியடைந்தது. உயிர்வகைகள், தாபரப்பொருள்கள், முதலியவற்றையொட்டிய சில உண்மை தெரிந்திருக்க அவ்வுண்மைகளைச் செயற்படுத்தப் போதிய சௌகரியங்கள் இருந்தமையால் வைத்திய நூல், கிருஷி நூல் முதலியவைகளும் வளர்ச்சியடைந்தன. இவையும் இவைபோன்ற மற்றக்கலைப் பயிர்ச்சிகளுமிருந்தனவாயினும் சாங்கோபாங்கமான அறிவுணர்ச்சி இல்லாதேயிருந்தது.

பிரகிருதிசாஸ்திரமானது தத்துவஞானத்திற்கு இருவகையாகக் கடமைப்பட்டிருக்கிறது. முதலாவது தனக்கமைந்த சம்பந்தங்களையும் கட்டுப்பாடுகளையும் தத்துவஞானத்தினுதவியால் அந்த சாஸ்திரம் அறிந்து கொண்டது. இரண்டாவதாக, தத்துவஞானப்பயிற்சியுடையார் யூகமுறையாக தமக்கு ஏற்பட்ட இயற்கையைப் பற்றிய சம்சயங்களைத் தொகுத்து வைக்கவே, உண்மையை ஆராய்ந்து செல்லும் பிரகிருதிசாஸ்திரியின் வேலை எவ்வளவோ சுலபமாயிற்று.

இத்தகைய நன்மைகள் ஏற்படுகின்றன வாயினும், பிரகிருதி சாஸ்திரத்தின் நல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது தத்துவஞானப் பயிற்சியினின்றும் அதனை முற்றிலும் பிரிப்பதே. இவ்வண்ணம் செய்யாதது பற்றியே அதனை ஆதியில் கையாடிவந்த கிரேக்கர் முதலியோர் அச்சாஸ்திரத்தின் உண்மைகளைச் செவ்வனே தெரிந்தனரில்லை; இவ்விருகலைகளை வேறுபிரிக்கவேண்டுவதின் அவசியத்தை யுணர்ந்து அவ்விதம் செய்ததொடு, பரீக்ஷணங்களை (Experiments) ஏராளமாகக் கையாடத் துணிந்தோமாகையினாலேயே தற்காலத்தில் நாம் முன்னோர்களைவிடப் பலமடங்கு ஏற்றமாகிய சாஸ்திர அறிவைபடைந்ததும்.

"ELSINORE",
Trivandrum,
April 1914.

T. V. NILAKANTA PILLAI B. A.

போட்டி உபந்நியாசங்கள்.

(மாசி 1089)

வரப்பெற்ற பத்து உபந்நியாசங்களுள் இதுவே முதலாவதாக மதிக்கப்பட்டது. 1 ரூபா விலையுள்ள 'விக்டோரியாமஹாராணிசரித்திரமும்' 8 அணுவிலையுள்ள 'கற்பகவல்லியும்' பரிசளிக்கப்பட்டன.

பத்திராதிபர்.

அச்சியந்திரமும் அதன்வளர்ச்சியும்.

மனிதன் மிருகப்பருவத்தைத் தாண்டி நாகரீகத்தில் அபிவிருத்தியடைந்துகொண்டுவரவே தனக்குத் தட்டுப்படுகிற விஷயங்களை எழுதிவைத்துக்கொள்ள எண்ணங்கொண்டான். இதுமூலமாக எழுதும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. எழுதுவதற்குப் பலநாட்டுப் பூர்விகர், பலவிதமான சாதனங்களை யுபயோகித்து வந்தனர். சிலர் தோலிலும், வேறுசிலர் இலைகளிலும், மற்றொருதிறத்தார் பலகைகளின்மீதும், ஏனையோர் வேறுவித பொருள்கள் மீதும் எழுதிவந்தார்கள்.

இந்தியாவில் முற்காலங்களில் எழுதுவதற்கேற்ற சௌகரியமான சாதனங்கள் இப்பொழுதுள்ளவைபோலிருக்கவில்லை. நம் முன்னோர் அக்காலத்துப் பனையோலைமீது எழுதிவந்தனர். அவர்கள் உபயோகித்துவந்த எழுது கருவி நாரசம். நாரசம் பிடித்தெழுதுவது நிரம்ப வருத்தத்தைக்கொடுக்கும். அதிகநேரமும் வேண்டிவரும். எனினும், இக்கஷ்டங்களைப் பொருட்டாயெண்ணுமல், அவர்கள் அவ்விதமாகவே ஏட்டுப்புத்தகங்கள் முதலியன எழுதுவாராயினர். இங்ஙனஞ் சிலகாலஞ்செல்லவும், எழுதிவைக்கும் சாதனங்களுக்கு பிரதிபகர்ப்புகள் ஆவசியப்பட்டன. ஓலையின்மீது எழுதியெடுப்பது நிரம்ப நேரமும், அதிகப்பணமும் பிடிப்பதாயிருந்தமைபற்றியே ஏட்டுப்புஸ்தகங்களிலமைந்திருந்த கிரந்தங்களின் பகர்ப்புகள் மிகச்சுருக்கமாயிருந்தன. இராமாயணம், மஹாபாரதம், முதலிய கிரந்தங்களைப்பகர்த்தியெழுதுவது ஒரு இலேசான காரியமல்ல. இத்தகையவருத்தம் நம் நாட்டுமுன்னோர்கள் மட்டுமன்று ஏனைய நாட்டுப்பூர்விகரும்

அனுபவித்தே வந்தனர். இவ்விதம் காலம் கழிந்துவரவும், மனிதர், தம் உணர்ச்சித் திறனுள்ள அறிவினுல், சுளுவில் எழுதிமுடிக்கவல்ல வொருபாயம் கண்டுபிடிக்கலாயினர். இவர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போதேற்படுத்திய அச்சியந்திரம் இக்காலத்துள்ளதுபோல் அவ்வளவு பரிபூரணமாயிருக்கவில்லை.

பத்தாம் நூற்றுண்டிற் கூட சீனதேசத்தார் அச்சியந்திரத்தை ஒருவாறுபயோகித்துவந்தனர். அவர்கள் கையாடிவந்த அச்சியந்திரப் பிரயோகம் இப்போதைய அச்சிடுவேலையினின்றும் முற்றும் மாறுபாடுடையதாயிருந்தது. நாம்தற்காலத்திலுபயோகித்துவருகிற அச்செழுத்துக்களுக்குப் பதிலாக மரக்கட்டைகளையுபயோகித்துவந்தனர். இந்தப் பிரயோகம் பூங் தௌ (Foong Taou) என்னும் ஒரு சீனரால் கையாடப்பட்டது. அச்சிடவேண்டியவைகளை ஒருவித மையால் மிகவும் இலேசான கடிதத்தில் எழுதிக் கட்டைகளின்மீது தலைகீழாகப் பதித்துவிடுவார்கள். இப்படிச்செய்வதினுல் எழுத்துக்களெல்லாம் தலைகீழான வடிவுகொண்டு கட்டைகளின் மீது பதிவன. பின் அவ்வக்ஷரங்களினின்றும் அவசரமில்லாத பாகங்களைக் கொத்தியெடுத்துவிடுவார்கள். அப்பொழுது எழுத்துக்களெல்லாம் உயர்ந்த மட்டத்தில்விடப்பட்டிருக்கும். இவ்வெழுத்துக்களின்மீது வெறொரு வகையான மையைத் தடவி கடுதாசிகளின் மேல் அமிழ்த்துவார்கள். இவ்வழக்கம் சீன தேசத்தில் இன்னும் நடந்துவருகிறதாகத் தெரியவருகிறது. ஆங்கிலேய அச்சியந்திரங்களை அவர்கள் அதிகமாக வழங்கிவருகிறதில்லை. அவர்களுடைய வேத புஸ்தகங்களை யச்சிட மட்டுமே இவைகளையுபயோகித்துவருகின்றனர்.

பதினேராம் நூற்றுண்டில் சீனர்கள் மாற்றக்கூடியனவும் களிமண்ணுல் செய்யப்பட்டனவுமான அச்சடிக் கட்டைகளை உபயோகித்துவந்தனர். 1337 ஆம் வருஷத்தில் மாற்றக்கூடிய அச்சடிக் கட்டைகளுபயோகித்து அச்சிட்ட ஒரு "கொறிய" Corea) தேசத்துப் புஸ்தகம் லண்டன் மாநகரத்துப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருப்பதாயுமறிகிறோம்.

இனி, அச்சியந்திரம் எவ்விடத்தில், எக்காலத்து எவரால், நிர்மாணிக்கப்பட்டதென்று கூறப்போதிய சான்றுமில்லை. ஐரோப்பாக் கண்டத்தில் மாற்றக்கூடிய அச்சுக்கட்டைகள் பதினைந்தாம் நூற்றுண்டிற்கு முன்னரே உபயோகித்துவந்தனராம்.

சென்ற நான்குநூற்றாண்டுகளாக ஆங்கிலேயப் பண்டிதர்கள் அச்சியந்திரம் கண்டுபிடித்த பெருமை யாருக்குரியது என்றறியுமாறு விசாரணை செய்துவருகின்றனர். அச்சியந்திரம், ஸ்ட்ராஸ்பர்க் (Strasburg) என்னும் நகரத்தில் குட்டன்பெர்க் (Guttenberg) என்னும் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டதென்று 1499 ஆம் வருஷபரியந்தம் ஐரோப்பியர்கள் எண்ணிவந்தார்கள். மேற்கூறிய வருஷத்தில் பிரசுரமான ஒரு ஐரோப்பியப் பத்திரிகை (The Cologne Chronicle) அச்சியந்திரம் முதலாவதாக ஜெர்மனி தேசத்தில் றைன் (Rhine) நதிக்கரையில் மெயின்ஸ் Mainz) என்னும் பட்டணத்தில் 1440 ஆம் வருஷத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாய்க் கூறுகிறது. இவ்விடத்தில் 1454 ஆம் ஆண்டில் முதன்முதலாக அச்சிடு வேலை நடத்தினார்களாம்.

1476—1477 ஆம்வருஷங்களில் வில்லியம் காக்ஸ்டன் (William Caxton) என்பவர் இங்கிலாந்தில் முதலாவதாக அச்சியந்திரத்தை யேற்படுத்தினர். அச்சியந்திரம் கொண்டுவரப்பட்ட முதல் நூற்றாண்டவ்வளவும் ஒரு கலக்கமுள்ள காலமாகவிருந்தது. அக்காலத்து நாகரீகமற்ற ஜனங்கள் அச்சியந்திரத்தை ஒரு தேவதையின் அவதாரமென்னப்பாராட்டிவந்தனர். இராஜாங்க விஷயங்களைப்பற்றி ஜனங்கள் பத்திரிகைகள் மூலமாய்ப் பேசிவந்தனர். இதுபற்றி அக்காலத்திய அரசர்கள் அச்சியந்திரங்களையும் அச்சிடுபவர்களையும் ஆதரித்தார்களில்லை; கொடுஞ் சட்டங்களை அச்சிடுபவர்மேற் சுமத்தினர். ஆகவே கொஞ்சக் காலத்திற்குள் அச்சியந்திரம் கீழ்மண்டிப்போய்விட்டது. பின், இச்சட்டங்கள் சீர்திருத்தம்செய்யப்பட்டன. இதேமாதிரிச் சட்டிட்டங்கள் இந்தியாவில் பதினெட்டாம் நூற்றாண்டில் உண்டாயிருந்த அச்சுக்கூடங்களின்மேற் சுமத்தப்பட்டிருந்தன. ஆனால் ஹேஸ்டிங்ஸ் பிரபு முதலான சீமான்கள் அவற்றைப் பேதப்படுத்திவிட்டனரென்றறிய சந்தோஷப்படவேண்டியதுதான்.

1814 ஆம் வருஷத்தில், கோணிக் (Konig) என்னும் ஜெர்மனியரொருவர் நீராவியால் வேலைசெய்கிற ஒரு அச்சியந்திரத்தை கண்டுபிடித்தார். இதை முதலாவதாக உபயோகித்தவர் ஆங்கிலேய டைம்ஸ் (Times) பத்திரிகையின் பத்திராதிபரான ஜாண் வாள்டர் (John Walter) என்பவரே. அவருபயோகித்த இயந்திரம் மணியொன்றுக்கு 1000 கடுதாசிகள் வீதம் அச்சிடக்கூடியதாயிருந்ததாம். பின்னர் அநேக மேதாவிகள் அச்சியந்திரத்தை நூதனப்படுத்தியிருக்கின்றனர். அவருள் ஹோ (Hoe) என்னும் ஒருவர் செய்த இயந்திரம்

மணியொன்றுக்கு 20,000 கடுதாசிகள் அடிக்கக்கூடியதாயிருக்கின்றது. இன்னும், அநேகவிதச் சுப்பிரயோகங்கள் அச்சியந்திரத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. சில இயந்திரங்கள் கடுதாசிகளை மடிக்கவும், கூடுகளிலடைக்கவும் முத்திரை யொட்டவும் இன்னும் அநேகவிதமான வேலைகள் செய்யும்படியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அச்சிடுவதையொட்டின சகல வேலைகளும் இயந்திரத்தினுல் சுளுவில், க்ஷணநேரத்தில் செய்யப்படுகின்றனவென்றால் மனிதனுக்கு இதைவிட வேறென்ன சௌகரியம் வேண்டும்? படங்களை அச்சிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளுமிருக்கின்றன. 1000-1500 ரூ விலையுள்ள படங்களின் சரிபகர்ப்பு இரண்டுமூன்று அணுவிற்கும் கிடைக்கின்றது.

அச்சியந்திரமே இப்பொழுது உலகத்துலாவுகிற வர்த்தமானப்பத்திரிகைகளுக்கு ஆதாரமாகவிருக்கின்றது. இப்பத்திரிகைகள் மூலமாயல்லவா இவ்வுலகத்து நடக்கிற சங்கதிகளைப்பற்றி யறிகிறோம்? ருஷிய ஜப்பானிய யுத்தம், போயர்யுத்தம், பால்கன் யுத்தம் முதலிய சம்பவங்களைப் பற்றிய சமாசாரங்கள் நாம் எவ்வளவு சீக்கிரம் நேர்முகமாய்ப் பார்த்ததுபோல் அறிந்துகொண்டோம். மேலும் நம் சோதர இந்தியர்கள் தென் ஆப்பிரிக்காவில்படும் கஷ்டங்களை எவ்வளவோ தெளிவாயறிந்தோம். தபால், தந்திதபால் இவையிருந்தும் வர்த்தமானக் கடுதாசிகள் இல்லாதிருந்தால் யாதொருபயனுமில்லை. இச்சமாசாரப்பத்திரிகைகளே நம்மிடையில் சமுதாயஒத்துணர்வை யுண்டுபண்ணுகின்றன. அவைதாம் இவ்வுலகத்தைத் திரட்டிக்கட்டும் கயிறுகளாகவிருக்கின்றன. அவையில்லாவிட்டால் இப்பொழுது இவ்வுலகத்திலிருக்கிற ஜாதியார் ஒருவரையொருவர் அறியாமலேயிருந்திருப்பார். அச்சியந்திரம்வரவே விலையேறின புஸ்தகங்கள் குறைந்தவிலைக்குக் கிடைக்கின்றன. நல்லபுஸ்தகங்களுக்கிடையில் கெட்ட புஸ்தகங்களும் வெளியேறுகின்றனவென்றாலும் நமக்குகிடைக்கும் நன்மையானது தீமையினின்றும் பதின்மடங்கு ஏற்றமாயிருப்பதால் நாம் நன்மையையே கவனிப்போமாக. அச்சியந்திரமில்லாதுபோனுல் இப்பொழுது கல்விச்சாலைகளிற் கற்பிக்கிற உயர்தரப்படிப்பும் இல்லாமலே இருந்திருக்கும். ஏனென்றால், தற்காலத்திய நாகரீகமான படித்தம் புஸ்தகங்களின் எண்ணிறந்த தொகையைப் பற்றிநிற்கின்றது. ஏட்டுப்புஸ்தகங்கள் உபயோகித்து வந்த முற்காலங்களில் குருவுக்கு இரண்டொரு சீடர்களே இருந்தனரென்றுசொல்வது வியக்கத்தக்க விஷயமல்ல. நம்மிடையில் கற்றறிந்த ஜனங்களின் தொகையைப்பெருகச்செய்வதும் அச்சியந்திரமே. அச்சி

யந்திரத்தின் சகாயமில்லாதுபோனால் உலகத்துள்ள மூதறிஞரைப் பற்றிநாமறிவதெங்ஙனம்? நாம் இப்பொழுது காண்கிற புஸ்தகசாலைகள், வாசிப்பு மண்டபங்கள், முதலியவற்றிற்கு மூலாதாரமாய் நிற்பது அச்சியந்திரம். அது நமக்குத்தற்காலத்தில் உபயோகமுள்ள சாதனங்ளிலொன்று. நம் பிரதானவாழ்விற்கும் சுகத்திற்கும் காரணமாய் நிற்கின்றதுமது.

ஆகையால், அச்சியந்திரம் நாம் பெற்றிருக்கும் பெரும் பேறுகளிலொன்றாம்.

T. V. Arunachalam Pillai
IV Form
H. H. The Maharaja's High School,
Trivandrum.

'தமிழன்' அபிமானிகட்கோர்விண்ணப்பம்.

"தொட்டனைத்தூறு மணற்கேணிமாந்தர்க்குக்
கற்றனைத்தூறுமறிவு"

இவ்வுலகின்கண் ஏற்பட்டுள்ள மானிட ஜன்மத்திலுதித்தவர்கள்யாவரும் தம் ஜீவியகாலத்தில் தம் தேசத்தவர்கள் பற்பல அறிவிலும், சன்மார்க்க நெறியிலும் தேர்ச்சியடையும் பொருட்டு தம்மால் செய்யக்கூடிய கருமங்களை யனுசரித்துவருவது அத்தேசத்தின் வாழ்வுக்கு இன்றியமையாததாகும்.

தன்னினம், தன்மனைவி, தன்பிள்ளை என்ற சிந்தனைமேற்கொண்டு சுயநயத்தால் வருந்தி சுயவாழ்வுக்கென்றே இராப்பகல் உழைக்கும் அநேகரை நம் நாட்டில் பார்ப்பது சகஜமானாலும் மேற்கூறிய நாகரீகம்பெற்று அத்தகைய கல்வி கற்றவர்கள் சிலர் தேசாபிமானங்கொண்டு, "பேதமையகற்று" என்னும் முதுமொழியை ஆதரித்து, நம் நாட்டவரின் இருள்போன்ற அறிவின்மையை நீக்கும் பொருட்டு தங்களாலியன்றமட்டும் முயற்சித்துவருவதையும் பார்த்துவருகிறோம்.

விளக்காகிய அறிவை நாட்டற்கு நாம் செய்யக்கூடும் நற்கருமங்கள் பற்பலவுள.: பாடசாலை ஏற்படுத்துவதும், பற்பல உபந்நியாசங்கள் செய்தலும், தாழ்ந்தோர் வறியோரின் பிள்ளைகளை மிக்கப் பணச்செலவின்றிபடிப்பிப்பதும் கைத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தலும் இத்தகைய கருமங்களேயாம்.

மிக்கநாகரீகத்தால் பிரக்யாதிபெற்ற நாடுகளில் எழுதவாசிக்கத்தெரியாத ஆண்பெண் உண்டென்று சொல்வதசாத்தியம். அவர்களுக்குள் வாசிப்பின்மேல் இருக்கும் வாஞ்சை அற்பசொற்பமல்ல. அதற்கனுசரணையாயும், அவர்கள் அறிவை விருத்திசெய்யும்படியும் தினசரி அல்லது வாராந்தர மாதாந்தர வர்த்தமானப்பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு நாடெங்கும் உலாவிவருவதை யறிவோம். சிறிதுவருடங்களுக்குள் திடீரென அதிசயிக்கத்தக்க விதமாய் மிக்க நாகரீகத்துக்குள்ளான ஜப்பான் தேசத்தில் சற்றேறக்குறைய ஐந்நூறு தினசரிவர்த்தமானிகள் இருப்பதாகவும், தோட்டி, நாவிதன் முதலிய சொற்ப வரும்படியுள்ளவரும் பத்திரிகை வாங்கி வாசிக்கிறார்களெனவும் அறிகிறோம்.

நமது தேசத்திலோ அவ்வித அவல் இன்னும் உண்டென்றில்லை. எழுதவாசிக்கத்தெரிந்த புருடர்கள் மிகச் சொற்பம். அவ்வகைப் பெண்களோ அதனினுஞ் சொற்பம் மேலும் ஆங்கிலபாஷையில் மிகத்தேர்ச்சிபெற்ற B. A., M. A., B. L., பட்ட தாரிகளுந் தமிழ்பாஷையை அலக்ஷியஞ்செய்து அதன் இலக்கண இலக்கிய விஷயங்களை வாசிக்கவெறுப்புற்றவர்களாய்ப் போகின்றனர். இவ்விதநிலைமையைச் சொற்பகாலத்தில் மாற்றிவிடலாமென்று யோசிப்பது சமுத்திரத்தினுப்பை மாற்ற நினைப்பதையொக்கும் என்றாலும், தாய்பாஷையாகிய அமிர்தம்போன்ற தமிழை விருத்திசெய்வது நமக்கேற்பட்ட கடமையாதலால், அவ்வாறு முயற்சிசெய்யும் ஸ்ரீமான் எஸ். முத்துசுவாமிப்பிள்ளை அவர்களுக்கு கைகொடுத்துதவுவது மேலான சிலாக்கியமென்று கருதல்வேண்டும்.

தென்னாட்டவரின் ஜீவியமுழுவதும் தமிழ்பாஷையோடே இசைந்திருப்பது மன்றியும், ஐரோப்பியபண்டிதர்களால் அப்பாஷையின்மேன்மை சிறப்புவிக்கப்படுவதாலும், அப்பாஷையையே நமதகத்தில் வழங்கிவருவதாலும், நாம் அதைப்போற்றிப்பிரஸ்தாபிக்கமுயலாதிருப்பதெப்படி? எளியநடையில், சொற்சுவை, பொருட்சுவையுடன் அமையப்பெற்ற "தமிழன்" என்னும் இப்பத்திரிகையின் பல விஷயங்களை நாம் கண்ணுற்றோம். புத்தியை விருத்தி செய்யும் விஷயங்களோடு சந்தோஷத்தை உண்டாக்கி மனத்தைக் கவரத்தக்க விஷயங்களும் கலந்திருக்கின்றன. "கொடுந்தமிழ்" நடை அவ்வாறு எழுதுபவரின் திறமையை உணர்த்துமே தவிர வாசிப்பவர்களுக்கு மிக்க அனுகூலமில்லையென உணர்ந்து அவ்வித உயர்ந்த நடையை நீக்கி யாவரும் அறியக்கூடிய இலேசான நடையில் விஷயங்கள்யாவும் எழுதப்பட்டுள்ளன.

இப்புவியில் காணப்படும் எந்த அனுஷ்டானத்தையும் பூர்ணம் கரையற்றது என்று சொல்வதில் பொருளில்லை யாதலின் இப்பத்திரிகையையும் நாம் வழுவற்றதெனச் சொல்லோம்; என்றாலும், "நன்மைகடைப்பிடி" "செய்வனதிருந்தச்செய்" என்னும் ஆத்திச்சூடியின் சத்தியங்களை பால்யமுதல் நன்குணர்ந்த நம் நண்பர் முத்துசுவாமிப்பிள்ளை மனோபலம் தேகபலம் உடையவரென்றும், தமிழில் ஒப்பற்ற பயிர்ச்சியுடையவரென்றும் தெரிகிறது. இப்பத்திரிகையும் அவர் ஆளுகைக்குள்ளிருப்பதால் வளர்ந்தோங்கிமாசற்றவிதமாய் பிரகாசிக்குமென்பதற்கு ஐயமில்லை.

நம் தேயத்தில் முற்காலத்தில் வர்த்தமானப்பத்திரிகைகள் கிடையாவெனப் பகர்ந்ததினால் நவீனகாரியங்களின்மேல் நமது நாட்டார்க்கு நாட்டமில்லையென்று சொல்ல இடமில்லை. வர்த்தமானங்களை நாவால் பிரசுரித்து வெளிப்படுத்துந்தன்மை நம்மவர்களுக்கு எப்போதுமுண்டு. துறவண்டை ஆற்றண்டை நாடோறும் கூடி வர்விஷயங்கள் யாவையும் ஒளிப்பின்றி பேசி சல்லாபிக்கும் நம் பெண்களை விடச்சிறந்த பத்திராதிபர்களுமுண்டோ? கிணறு தாண்டி கிராமந்தாண்டி அக்கினி தீவிரமாய் நாடெங்கும் பரவிவரும் வதந்திகளும் அநேகமுண்டென்றறியோமோ? அப்படி வரும் வர்த்தமானங்கள் உருமாறி நிலைதவறி "மூன்றுகரியகாகங்கள்" என்ற ஆங்கிலக்கதைப்படி உண்மைக்கு நேர்விரோதமாய் வெளிப்படும். பத்திரிகைகள் சத்தியத்தையே ஸ்தாபித்து உறுதிப்படுத்தும்.

இப்பத்திரிகையால் வெளியாகும் விஷயங்களை ஏற்றுக்கொள்வதுடன், தாழ்ந்த சந்தாவாகிய இரண்டு ரூபாயைக் கொடுத்து சந்தாதார்களாகிப்பத்திரிகையை முன்னுக்குக்கொண்டுவரத்தமிழ் நாட்டாரனைவரும் பிரயாசப்படுவார்களென்று நம்புகிறோம்.

S. M. சுப்பிரமணியன்தரகனார்
வடசேரி.

சமுதாய ஒற்றுமையும் தமிழ்ப் பாஷையும்.

ஒற்றுமையென்றால் ஒன்றாயிருக்குந் தன்மை. ஆகவே சமுதாய ஒற்றுமை யென்றால் சமுதாயம் ஒன்றுசேர்ந்து நடத்துவது எனப் பொருள்படும். இவ்வுலகின்கண்ணுள்ள ஒவ்வொரு சமுதாயமும் அபிவிர்த்தியடைவதற்குக் காரணமாயிருக்கும் பல மார்க்கங்களுள் ஒற்றுமையென்பதே முக்கியமான வழியாகும். தமிழர்களுக்குள் பெரும்பான்மையும் ஒற்றுமையில்லாதது பற்றி அவர்களுடைய சமுதாய நிலைமையும் பாஷாநிலைமையும் மிகத் தாழ்ந்த ஸ்திதியை அடைந்திருக்கின்றன வென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம் இன்னும் சிறிதுகாலம் இப்பாஷையும் சமுதாயமும் இந்தஸ்திதியிலேயே இருக்குமானால் அவைகளின் கதி யென்னாகுமென்பது சிறிது ஆழ்ந்து ஆலோசிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும்.

முதலில் தமிழ்ப் பாஷையை யெடுத்துக்கொள்ளுவோம். தமிழ்ப் பாஷையானது பெருங்காலந் தொடங்கி மிகப் புராதன பாஷையென்றும் இனிமைபயக்கும் சிறப்பினையுடையதென்றும் அறியப்பட்டிருக்கின்றது. இவ்விதம் மேன்மையடைந்திருக்குந் தமிழ்ப்பாஷையானது ஒருகாலத்தில் ராஜமந்திரங்களிலும் சர்க்கார் கச்சேரிகளிலும் நியாய ஸ்தலங்களிலும் பட்டணங்களிலும் நாட்டுப்புறங்களிலும் எவ்விடங்களிலும் பேசப்பட்டுவந்தது. ஆகவே இப்பாஷையின்கண் அடங்கியிருக்கும் ஏராளமான அரிய பெரிய நூல்களைத் தவிர இது ராஜபாஷையாகவுந் தேசபாஷையாகவும் வழங்கிவந்தது. இப்பொழுதோவெனின் இது ராஜபஷையல்ல. தேசபாஷையல்ல. நாட்டு பாஷையல்ல. வீட்டுபாஷையுமல்ல. ஆயின் இது அடுக்களை பாஷையாகவே முடிந்திருக்கிறது. சிறு குழந்தைகள் முதல் பெரிய புருஷர்கள்வரை சொந்தபாஷையைத் தள்ளிவிட்டு இதரபாஷைகளை பேசிவருகிறார்கள். தமிழ்பாஷையில் சம்பாஷணைசெய்வது தாழ்வு என்றும் பிறபாஷைகளில் சம்பாஷணை செய்வதுதான் உயர்வென்றும் கருதப்பட்டிருக்கிறது. இந்திய மாதாவிற்கு இடைக்காலத்தில் சில குழந்தைகள் பிறந்ததென்று முன் குழந்தையாகிற தமிழைத் தள்ளுவது நியாயமல்ல. ஆகையால் இப்பொழுது சில இடங்களில் நாட்டுப் பாஷைகளை உயர்தர சீர்திருத்தத்திற்குக் கொண்டுவரும் முயற்சியோடு தமிழரனைவரும் ஒருங்குசேர்ந்து தமிழ்ப் பாஷையை சிறப்புக்குக் கொண்டுவருவதான, ஆங்கில வானசாஸ்திரம், ஜடதத்வ சாஸ்திரம், பூகோளசாஸ்திரம், மானசீக சாஸ்திரம், சமுதாய சாஸ்திரம், இவைபோன்ற அரும்பெரும் நூற்களை மொழிபெயர்த்தலென்ன, நூதன பதங்கள் கண்டுபிடித்து பாஷையை இன்னும் போஷிப்பித்தலென்ன, அவைகளை யாவருக்கும் சரியாய்ப் பயிற்றுவித்தலென்ன, இவைபோன்ற முயற்சிகளில் கல்வியுடைவோரனைவரும் ஒத்துழைக்கவேண்டிய காலம் மிகச் சமீபித்திருக்கின்றது.

இரண்டாவதாக சமுதாய ஒற்றுமையைப் பற்றி ஆலோசிப்போம். தமிழர்களுக்குள் சமுதாய வொற்றுமை யில்லாதது வியசனிக்கத்தக்கது. இத்திருவாழுங்கோட்டிலுங் கூட ஒற்றுமையினிமித்தம்இதர சமுதாயத்தார் எவ்வளவு உயர்ந்த சீர்திருத்தத்தை அடைந்திருக்கின்றார்கள். பிராம்மண சமாஜம், கிறிஸ்தவசமாஜம், முகம்மதீய சமாஜம், ஈழவசமாஜம், புலயசமாஜம் முதலிப பல சமாஜங்களும் உயர்நிலையைப் பிராபித்திருப்பது ஒற்றுமையினாலன்றோ? ஒற்றுமையில்லாது எக்காரியந்தான் கைகூடும். சரீர உறுப்புகளை பார்க்குமி

டத்து ஒவ்வொரிந்திரியமும் ஒற்றுமையுடன் உழைத்தால் மட்டிலும் சரீரஆரோக்கியம் உண்டாகும். அதுபோலவே உலகிலுள்ள ஒவ்வொரு தொழிலாளர்களும் ஒற்றுமையோடு அவரவர்கட்கேற்பட்ட தொழிலை செய்தால் மட்டிலும் உலகம் நடந்தேறும். ஒரு சமுதாயத்தில் ஒற்றுமை வராததற்குக் காரணம் முதலாவதாக அச்சமுதாயத்தார் சிறந்தவாசிப்பும் உயர்ந்தமனவிரிவும் பரந்தகாட்சியுமில்லாமல் வெறுந் தந்நலங் கருதியிருப்பதினுற்ருன். இரண்டாவது காரணம், தன்சுகம் பிறரிடத்திலும், பிறர்சுகம் ஒன்றுசேர்ந்த பொதுஜனங்களிலும் நிகழ்கின்றது என்னும் உண்மையை அனுபவித்தறியாதது. மூன்ருவது மனிதனுடைய ஜன்மோத்தேசம் பிறருக்குழைத்தல் என்றும், பிறருக்கும் பொதுவிற்கும் உழைத்தால் மட்டிலும், முத்தி கிடைக்குமென்றும், இதுவே அவர்கள் அனுஷ்டித்துவரும் மதத்தின் இரகசியமென்றும், பொது நலத்திற்குழைக்கும் புண்ணியாத்மாக்களை தூஷிப்பதும் அவர்கள் முயற்சியை யில்லாமற் செய்வதும் பஞ்சமாபாதகமென்றும், அது நரகத்திற்குக் கொண்டுபோகும் வழியென்றும், தம்மாலியன்ற உதவி தான் செய்யாராயின் அதுவே பாவமென்றும் அவர்கள் அறியாதது. நான்காவது காரணம், ஒரு மனிதனுக்கேற்பட்ட தன்னைச் சகாயித்தல் தன் பந்துக்களை சகாயித்தல் முதலாய கடைமைகளோடு பொதுவிற் குழைத்தல் சமுதாயத்திற்கும் மதத்திற்கும் வேண்டிய சகாயம் செய்தல் முதலியவைகளும் சேர்ந்தவையேயென்ற உண்மையை அறியாமை. இக்காரணங்களால் உண்மையான ஒற்றுமை நிகழ்வதற்கு இடமில்லாமற் போய்விடுகிறது.

"எவர் எப்படிப் போனுலென்ன சுவர் எப்படிச் சாய்ந்தாலென்ன, என் காரியம் எனக்கு. ராஜ்யம் இருந்தேன் போயேன்; மற்றவர் கெட்டேன் வாழ்ந்தேன்; எனக்கொன்றுமில்லை. பாஷையாம் கூட்டமாம் பணம பறிக்க வழி எங்கே? கிடக்கிற கிடையுமல்ல; படுகிற பாடுமல்ல" என்று பேதைகள் சொல்வதுபோல் எல்லோரும் சொல்லத் துணிந்துவிட்டால் அறிவுடையவனுக்கும் அறிவில்லாதவனுக்கும் வித்தியாசமென்ன? இம்மாதிரி காரியங்களில் இந்த அறிவிலிகளுக்குப் புத்திபுகட்டுவது நன்மக்களின் கடமையாகும்.

"உலகினிலெந்தப் பெருந்தொழில்தானு
மொற்றுமையெனுந் திறத்தன்றி
நிலவிய பயனைப் பெற்றதேயில்லை;
நிகிலமே யணுக்களின் சேர்க்கை;

அலமரலின்றி எவருமங்கியன்ற
வளவினுக்குதவனுமாகும்;
பலபெயர் கூடும் முயற்சியில் பகவன்
உளனது பலனுறல் திண்ணம்.

பகவற் கீதையில் பகவானும்

"இரவிதா னொருவனேயாய் நின்றிந்த வுலகத்தெங்கும்
விரவிய விருளைநீக்கி விளக்குறுமாறு போல
தரவியா வருமுன்னில்லா சராசரவுடம்புதோறும்
பரவியானுதித்தமாயோ னொருவனே பரந்துநிற்போன்."

என்று கூறியிருக்கிறார்.

அதாவது, சூரியன் தானொருவனாக விருந்தும் உலகத்திலுள்ள இருளை நீக்கி எங்கும் பிரகாசித்து நிற்பதுபோல் யான் ஒருவனே சகல வுயிர்களிடத்தும் நிறைந்து நிற்கின்றவன்." என்பது. இதனால் நாம் எல்லோரும் கடவுளின் அம்சங்களென்றும், அவர் யாவரிடத்தும் நிறைந்துநிற்கின்றாரென்றும், ஆகையால் நாம் ஒருவருக்கொருவர் நேசித்து சகோதரஅன்பு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோமென்றும் ஏற்படவில்லையா? எப்பொழுது நாம் யாவரும் கடவுளின் குழந்தைகளென்கிற எண்ணம் நமக்குள் உண்டாகிறதோ அப்பொழுதுதான் நமக்குள் சகோதரபாவமும் ஒற்றுமையும் உண்டாகும்.

இதற்கு மாறாக "நான் பராசிரயமில்லாதவன், சுவாதந்திரியன் எனக்கு யாருடைய உதவியும் தேவையில்லை" என்ற அகங்காரமிதமீறி நம்மோடு குடிகொள்ளுமானால் நமக்குள் ஒற்றுமையுண்டாவது வருத்தம். ஆகையினால் அகங்காரத்தைக் குறைத்து "நன்மைசெய்தால் நன்மைகிடைக்கும்" "நன்முயற்சி நற்பலனைத் தரும்" என்ற உறுதிப்பாட்டோடு யாவரும் முதலில் ஒற்றுமைக்குழைக்கவேண்டியது. நாம் அன்னிய நாடுகளைப் பார்ப்போமானால் ஒற்றுமை, சமுதாயா பிவிர்த்தி முதலிய விஷயங்களில் நிச்சயமாகவும் எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியை நாம் அடைந்திருக்கிறோமென்பது நமக்குத் தெரியவரும்.

நாம் அன்னிய நாட்டிற்கு யாத்திரைசெய்வதோ மிகச் சுருக்கம். வர்த்தமானப் பத்திரிகைகள் வாசிப்பதோ அதனினுஞ் சுருக்கம். இங்ஙனமிருக்க நாம் அன்னியநாட்டுச் சீர்திருத்தங்களை அறிவதெவ்வாறு? நமக்குள் ஒற்றுமையுண்டாவதெவ்விதம்? அமேரிக்கா இங்கி

லாந்து முதலிய தேசங்களில் ஒருவனுக்கு ஒருபவுன் சம்பளமிருக்கு மானால் ஒருரூபாய் பொதுநன்மைக்குரிய காரியங்களுக்காகக் கொடுக்கின்றான். இவ்விதம் ஒவ்வொருவரும் ஒற்றுமைசேர்ந்து கொடுப்பதினால் ஏராளமான திரவியம் சேகரப்படுகின்றது. இந்த திரவியத்தைக்கொண்டு சமுதாயாபிவிர்த்தியாகிற மதவிஷயத்திற்கும் வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளுக்கும் தர்ம விஷயத்திற்கும் இன்னும் இதுபோன்ற பொதுநன்மையை உத்தேசித்துச்செய்யுங்காரியங்களுக்குமாகச் செலவுசெய்துவருகிறார்கள். சில வியாபாரஸ்தலங்களில் மஹமையென்ற ஏற்பாடு செய்திருப்பதும் இவ்வுத்தேசத்தைக் கருதியே. தென்னை ஏராளமாய்க் கிருஷி செய்கிற இடங்களில் பத்திற்கொரு தென்னை பொது நன்மைக்கென்று விடுகிறார்கள். மரச்சீனி முதலிய கிருஷி எதேஷ்டமாயுள்ளவிடங்களில் பத்திற்கொருமூடு பொது நன்மைக்கென்று விடுகிறார்கள். இவ்விதக் கொடைகளினால் பெருந் திரவியம் சேகரப்படுகின்றது. ஒவ்வொருவரும் ஒற்றுமை சேர்ந்தாலொழிய இவ்விதக் காரியங்கள் நிறைவேறா. நம் வரும்படிக்குத் தக்க ஒரு தொகை பொதுவிஷயத்திற்குக் கொடுப்பது எவ்வளவு சிறிதாக விருந்தபோதிலும் யாவரும் ஒன்று சேர்ந்து கொடுப்போமாயின் நிச்சயமாகவும் பெரும் தொகைகள் சேகரப்படும். இதற்கு ஒற்றுமையே அடிஸ்தானம். நாம் ஒவ்வொருவரும் தம்மைத் தனிமையாகப் பார்ப்போமானால் உலகமென்பதேயில்லை. யாவரையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்ப்போமானால் மட்டிலும் உலகமென்பதுண்டு. இவ்வுலகில் பிறருடைய உதவியில்லாமல் ஒருகாரியமும் நடந்தேறாது. இஃது கூறியவிடத்து மனிதரின் உதவியெதற்கு, எல்லாம் கடவுளின் உதவி வேண்டும் என்று சிலர் அர்த்தந் தெரியாமல் உளறுகிறதுண்டு. அவர்கள் அறியவேண்டியதென்னவெனின் கடவுளின் அனுக்கிரகத்தை ஒருவரும் வேண்டாமென்று சொல்லத் தயாறில்லையென்றும் முன் கூறியபடி ஒவ்வொரு ஆத்மாக்களும் கடவுளின் அம்சங்களென்றும் அறியவேண்டியது. நாம் மெய்யாக கடவுள் பக்தர்களானால் நன்மை விதைத்தால் நன்மையே விளையும் தின்மை யொருக்காலும் விளையாது என்ற உறுதிப்பாடு நமக்கிருக்கவேண்டியது. நாம் மெய்யான பக்தர்களானால் பொது நன்மைக்குழைக்கும் புண்ணியபுருஷர்களின் முயற்சியைக் கெடுக்க துணியமாட்டோம். தற்போதனை கொடுக்கமாட்டோம். பொறாமை கொள்ளமாட்டோம். தீங்கு விளைவிக்கமாட்டோம். நிந்திக்கமாட்டோம். "சுபவனை யீயவொட்டான் தானுமீயான்இவன்பாடு மாபாவி படும்பாட்டில் வன்பாடே" என்றபடி நம்மை நரகத்திற்காளாக்கிக் கொள்ளமாட்டோம். யாவரையும் அன்பாகவே நடத்துவோம். யாவ

ரிடத்தும் ஒற்றுமையாகவே யிருப்போம். யாவருக்குமியன்ற உதவி செய்ய மறுதலியோம். ஒருவர் முயற்சியில் குறைகளிருப்பின் அதை அவரோடு கலந்து பிறரோடும் ஆலோசித்துத் திருத்திக்கொள்ளு வோம். இதுவே உத்தம பக்தர்கட்கழகு.

மேலும் எந்நன் முயற்சியும் கடவுள் சங்கற்பத்தாற்றான் நடக்கின்றது. "அரண்மனே காத்தான் வெறுமனே போகான்." ஒவ்வோரு முயற்சியின் பயனும் இயல்பாகவேயுண்டாகும். அதற்குமுன்னுகவே விபரீதக்கொள்கைகளேயுஞ் சந்தேகங்களேயுங் கற்பிக்கவேண்டாம். ஒரு முயற்சி உடனேயே பலன் தரவில்லேயானல் பிற்பாடு பலன் தராதெனவுண்டோ? உடன் பலியாதானல் ஊக்கங்குறைந்து றங்கவேண்டுமென்பதுண்டோ? ஷேக்ஸ்பியர் ஆங்கிலேய மஹாகவியின் அருமை எத்தனேயோ ஆண்டுகளுக்கப்பாலல்லவோ தெரியவந்தது. மேலும் ஓர் விருக்ஷத்தை நடுகிறோம்; அதன் பலன் உடன் கிடைக்கின்றதா? தக்ககாலம் வந்தல்லாமல் பயன்படுவது அரிது. நம்முன்னோர் ஆலயம், சத்திரம், சாலேமரங்கள் இவைகள் வைத்தது அவர்களுக்கு உடனடி பயன்படுவதற்குத்தானு? இல்லேயே. நாம் நன்றியுள்ளவர்களானல் நம்முடைய பின் சந்ததிகளே நினேத்தாவது சமுதாய சீர்திருத்தம் செய்யவேண்டாமா? ஆகையால் எவ்வகையான அபிப்பிராய வித்தியாசங்கள் ஏற்பட்டபோதிலும் ஒன்றுசேர்ந்து அவைகளே நன்றாயாலோசித்து "ஊக்கமதுகைவிடேல்" என்னும் ஔவை மூதாட்டியார் திருவாக்கைக் குருவாக்காகக்கொண்டு சமுதாயாபிவிர்த்தி விஷயத்தில் முயற்சி செய்வோமாயின் கைகூடாக்காரியமும் ஒன்றுளதோ?

"பலபெயர் சேர்ந்து, பற்பல கருமமு
மிலகிய வன்புட னியன்றமட்டினு
நலமதாயொற்றுமை நாடிச்செய்வரே
லுலகினிற்கூடிடா கருமமுள்ளதோ?"

எத்தனேயோ நாட்கள் சென்றுவிட்டன. நாம் இன்னும் பராமுகமாயிருப்போமானல் சமுதாயவளர்ச்சியும் தமிழ்ப்பாஷாமகிமையுங்குன்றிவிடும். அதோடுகூட தமிழர்களின் நலேமையுந்தாழ்ந்துவிடும். அந்தோபரிதாபம்! இந்நாட்டில் எத்தனேயோ தமிழர்களிருந்தும் காருண்ய கவர்ண்மென்றார் அனுகூலமான உத்தரவுகள் கொடுத்தும், ஜனப்பிரதிநிதிகள் முன்னணியில்வந்து தக்கமுயற்சியெடுக்கத்துணியவில்லேயே! புண்ணியத்தை கருதியாவது நாஞ்சிநாட்டாரும் மற்றப்பெரியோர்களும் வேண்டியவற்றை முயற்சி செய்து சமுதாய நிலேமையையும் தமிழ்பாஷையின் நிலேமையையும் முன்னுக்குக் கொண்டுவருவார்களென்று முற்றும் நம்பப்படுகின்றது.

D. அகஸ்தியலிங்கம்பிள்ளே. F. T. S.

சமாசாரத்திரட்டு.

நமது திவான்ஜியவர்கள்.

சென்ற 7 வருஷகாலமாக நமது திவான்ஜியாகவிருக்கும் திவான் பகதூர் P. ராஜகோபாலாசாரியவர்கள் M. A., B. L., C I E., நாளது சித்திரை மாதம் 25—உ யோடு உத்தியோகம் விட்டுப் போவதாக உறுதியாய்விட்டது. அவ்வாறு போவதற்குமுன் திவான்ஜியவர்கள் சமஸ்தானம் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து பலவிடங்களிலும் பற்பல சமுதாயத்தாராலும சங்கத்தாராலும் நகரத்தாராலும் சமர்ப்பிக்கப்படும் வந்தனோபசாரப் பத்திரிகைகளை சுவீகரித்தபின்னர் ஆலுவாயில் வைத்து திவான் சார்ஜ் விடுவார்கள். பதில் நமது சீப் ஜஸ்டிஸ். M. கிருஷ்ணன் நாயரவர்கள் தற்காலமாக நியமிக்கப்படுவார்கள்.

நமது ராஜகோபாலாசாரியவர்களது உத்தியோக காலத்தில் நமது நாட்டார் ஒரு நன்மையும் அடையவில்லையென்று கூறுவது பொருளற்ற மொழியேயாகும். நமது அரசாங்கத்திலுள்ள பல டிப்பார்ட்டுமெண்டுகள் சீர்திருத்தம் பெற்றதும், தாழ்ந்தவருணத்தாருக்குப் பல உத்தியோகங்கள் நல்கப்பட்டதும் நாயர் ரெகுலேஷன் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதும் அவர்களால் செய்யப்பட்ட நன்மைகளில் முக்கியமானவைகளாகக் கூறப்படுகின்றன. டிப்பார்ட்டுமென்று சீர்திருத்தத்தில் சிறு உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் சொற்பங்கூட கருணைகாட்டியிருப்பார்களானால் அவர்கள் செய்த சீர்திருத்தங்களெல்லாம் மிகச் சிறப்புடையனவாக மதிக்கப்படுவனவாகவிருந்தன. தாழ்ந்த வருணத்தார் விஷயத்தில் அவர்கள் காட்டிய கருணை மிகவும் கொண்டாடத் தக்கதே. கூரிய புத்தியிலும், அகன்ற பயிர்ச்சியிலும், சலிப்பில்லா உழைப்பிலும் சமர்த்தான பரணத்திலும் நமது இராஜகோபாலாசாரியரவர்கள் இணையற்றவரென்று அவர்களது விரோதிகளுங்கூட ஒப்புக்கொள்ளத் தவறார்கள். பொதுவாக ஒருநாட்டின் மந்திரியாயிருப்பவருக்கு சர்வஜனங்களிடமிருந்தும் ஒருப்போல் நல்லபிப்பிராயம் பெறுவது கஷ்டமாக இருக்கலாம். இது சாதாரண உலகவியல்பு. பொதுநோக்காகப் பார்க்குமிடத்து அவர்களால் நாம் அடைந்ததாகக் கூறப்படும் தின்மைகளைவிட நன்மைகளே மிகுந்திருக்கின்றன. கடவுளருளால் தன்கீழ்ப்பட்ட குடிகளுக்கு எவ்வழியானும் நன்மையே செய்யவேண்டுமென்ற

உண்மையான நாட்டம் நமது இராஜகோபாலாசாரியவர்களுக்கு உள்ளதாக அவர்களது சென்ற 7 வருஷ நடபடிக்கைகளையும் உற்றுநோக்கினோர் அறியத் தவறார்கள். அவர்களது உண்மையான எண்ணத்துக்கு மாறாக ஏதேனும் நடந்திருக்குமாயின் அதற்குவேறுகாரணங்களும் உண்டாயிருக்கக் கூடும்.

தமிழர்கள் விஷயமாக அவர்கள மிகுந்த அநுதாபமுடையவராயிருந்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும். நாஞ்சிநாட்டில்நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களில் அவர்கள் செய்த பிரசங்கங்களைக் கவனித்தால் அதற்குப் பல திருஷ்டாந்தங்களைக் காணலாம். நமது பத்திரிகை விஷயமாகவும் அவர்கள் காட்டிய கருணை மிகப் பாராட்டத்தக்கதே. ஆகவே அவர்களது பிரிவு தமிழர்களுக்குப் பொதுவாகவும் நமக்குச் சிறப்பாகவும் துயர்தரக்கூடியதாகவே இருக்கின்றது.

அரசாங்க ஒழுங்கின்படி செய்யப்பட்ட தீர்மானத்திலிருந்து தப்பமுடியாதாகலின் நமது மாட்சிமைதங்கிய இராஜகோபாலாசாரியவர்கள் இன்னும் பலநாள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று விளங்குமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.!

வெளியூர் வர்த்தமானங்கள்.

நமது முக்கிய போஷகர்களுக்குள் ஒருவராகிய ஸ்ரீமாந் S.Rm. M. Ct பெத்தாச்சி செட்டியார் அவர்களின் பொது நன்மை நாட்டமும் உதாரகுணமும் சில நாட்களுக்குமுன் திருச்சிராப்பள்ளியில் திருஷ்டாந்தப்படுத்தப்பட்டன. ஆங்கு நடந்தேறிய 'இந்து சமயக் கூட்டத்தில்' அக்கிராசனாதிபத்தியம் வகித்ததோடு, கரூர்த் திருவிழா நடந்தகாலை ஹரிகதாகாலக்ஷேபம் சங்கீத ஜமா முதலிய உபசரணைகள் ஏற்படுத்தி கலைஞர்க்கு நன்கொடை ஈந்து ஸ்ரீமான் செட்டியாரவர்கள் ஜனங்கள் மனதைச் சந்தோஷப்படுத்தினார்கள். பொதுஜனக் கல்வியை விருத்தி செய்வதிலும், பள்ளிக்கூடங்கள், சங்கங்கள் ஏற்படுத்துவதிலும், அவைக்குத் தேவையான பொருள்கள் வரையாது கொடுப்பதிலும் இவரனைய பிறர் ஏராளமாய் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே.

விசேஷ உரிமை நாடுகிற (Suffragettes என்ற) ஆங்கிலச் சீமாட்டியர்களுக்குத் தலைமையான மிஸ்ஸிஸ் பாங்க்ஹர்ஸ்ட் (Mrs Pankhurst) என்பவரை கைதிசெய்த ஆங்கிலக் கவர்ண்மென்றாரிடம் தனக்குண்டாய கோபத்தால், மேற்கூறியவர்களுள் ஒருவராகிய மிஸ். ரிசசாட்ஸன்என்பவர் National Gallery என்ற சித்திரசாலையில்வைக்கப்பட்டிருந்த 45000 பவுன் விலை மதிக்கப்படும்மிகவும் கீர்த்திபெற்ற "Valasquez Venus" என்ற அழகியசித்திரப்பதுமையை சேதப்படுத்

திவிட்டாராம். இதுபோன்றசேதங்கள் இனியும் ஏற்படும் என்ற அச்சத்தால் லண்டன் மாநகரத்துச் சித்திரசாலைகள் பல அடைக்கப்பட்டன இஃது சித்திர வித்தை கற்றுக்கொள்ளும் மாணவர்கட்கு மிகுந்த அசௌகரியத்தைச்செய்திருக்கிறது.

குழந்தைகளும் தூக்கமும்.

வயது சென்றவர்கள் தினம் எவ்வளவுநேரம் தூங்கவேண்டு மென்பதைப் பற்றி பலர் பலவிதமாகச் சொல்லிவருகிறார்கள். ஆனால் குழந்தைகள் விஷயத்தில் மாத்திரம் அதிகநேரம் தூங்கவேண்டுமென்பது பொது அபிப்பிராயமாக இருக்கிறது 5 வயதுக்குட்பட்ட குழந்தை தினம் பன்னிரண்டு மணிக்குக்குறையாமலும், 5-க்குமேல் 15 வயது வரையில் 10 மணிநேரமும் தூங்கவேண்டும். குழந்தைகளுக்குச்சரியான தூக்கமில்லாமையால் பைத்தியம் பிடித்துப்போகிறது. குழந்தைகள் அதிகநேரம் தூங்கும்படி செய்தால் இப்படி நேருவது குறையுமென்று ஒரு பிரபல டாக்டர் சொல்லுகிறார்.

ஒரு பெண்ணின் ஞான திருஷ்டி.

யுனைடெட் ஸ்டேட்சுக் கடுத்துள்ள ரோட்தீவில் சுமார் 11 வயதுள்ள பியுலாமில்லர் என்ற ஒரு பெண் இருக்கின்றனள். அப்பெண் தனக்கு மறைவாகவுள்ள எந்தப் பொருளையும் தான் நேரில் கண்டதுபோல் குறிப்பிட்டுச் சொல்லி வீட்டிலுள்ளோரைக் களிப்படையச் செய்து வந்தாளாம். இவைகளைக் கண்ட அப்பெண்ணின் சுற்றத்தார் அப்பெண்ணின் அபாரசக்தியை சோதிக்கக் கருதி அவளை நியூயார்க் பட்டணத்திற்குக் கொண்டுபோகவும்; அங்கே மூடப்பட்டிருந்தஓர் அறையிலுள்ள இரும்புப்பெட்டியிலிருந்த நோட்டுகளின் நெம்பரையும் திடீரென்று வரும் மனிதர்களின் சட்டைப்பையிலிருந்த சாமான்களின்னதென்றும், எப்போதும் பார்த்திராத எப்பொருளையும் அவளால் சொல்லக்கூடுமென்றும் ஏற்பட்டதாம். அனேகர் இது மாயாசக்தியென்று பூஜித்தார்களாம். அப் பெண்ணை டாக்டர்கள் இரண்டுமணிநேரம் பரிசோதனை செய்த பின்பு அவள் மாயாசக்தியைக் கையாளவில்லையென்றும் ஆனால் எக்ஸ்ரேஸ் என்னும் ஓர் நூதன வெளிச்சத்தின் குணத்தையுடைய திருஷ்டியைப் போன்ற அசாதாரணமான ஞானதிருஷடி என்ற சக்தியை யுடையவளென்றும் உறுதி செய்தார்களாம்.

பெண் உடையுடுத்த ஒரு கப்பல் குமஸ்தா.

ஐ. ஜி. எஸ் என். கம்பேனியின் கப்பல் குமஸ்தா ஜோகிஷ் சந்திர தாஸ்குப்தா என்பவன் நாராயணகாங்ஜ் ரேயில்வே ஸ்டேஷனில் பெண்கள் தங்கும் இடத்திற்கு ஸ்திரீயைப்போல் உடுத்திக்கொண்டு உட்சென்று ஒரு ஸ்திரீயை அவமதிக்க எத்தனித்த குற்றத்திற்கு இந்தியன் பினல்கோர்ட் 451 254 பிரிவுகளின்படி 18 மாதம் தண்டனை விதிக்கப்பட்டதும் தவிர ரெயில்வே ஆக்ட் 119. பிரிவினையின்படி 100 ரூபாய் அபராதமும், கொடுக்கத்தவறினால் இன்னும் நாலுமாதம் அதிககாவலும் அடையவேண்டுமென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது.

ஒரு குரூரச் செயல்.

வங்காளத்தில் சிலவிடத்தில் ஆடுகளை உயிரோடுரிப்பதால், தோல் நீளமாயிருக்கின்றதாம். அதிக விலைக்கு விற்கப்படுகின்றதாம். அங்கு ஜீவவதை நிவாரண சங்கத்தார் அதனைத் தடுக்க முயற்சிசெய்து வருகின்றனர்.

ஒரு குருடனது அபூர்வச் செய்கை.

தென்னாற்காடு ஜில்லா விழும்புரம் தாலூக்கா கெங்கராம் பாளையத்தில் இரண்டுகண்ணும் குருடான பொன்னன் என்பவன் உயர்ந்ததென்னை மரத்தின்மீதேறி தேங்காயென்றும் இளநீரென்றும் கண்டுபிடித்து, அறுத்துக் காய்களைக் குலையாகக்கட்டி இருதோளின்மீது போட்டுக் கொண்டே இறங்கி விடுகிறான். அன்றியும், அறுவடைக்காலங்களில் நானாவிதமான பக்ஷணங்களை மோசம்போகாது விற்று ஜீவனஞ்செய்து வருகிறான். இவ்வாறு கண்ணிலார்க்கு நிதானமும், ஊமையாயிருப்பவர்கட்குச் சைகையும், செவிடாயிருப்பவர்கட்குக் காண்பிக்கும் செய்கைகளையறிந்துகொள்ளும் குணமும் கொடுத்திருப்பது சர்வலோக நாயகனது சக்தியன்றோ?

ஸ்திரீ போலீஸ்.

சென்ற ஆகஸ்டு மாதம் சிக்காக்கோவில் 10 ஸ்திரீகள் போலீஸ்வேலையில் அமர்த்தப்பட்டனர். இவர்கள் சிகாகோ நகரவாசிகளது துர்நடத்தைகளைத் திருத்துவதில் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். இவர்கள் ஸ்திரீபுருஷர்கள் கூடி நிர்த்தனஞ் செய்யுமிடங்களில் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்விடங்களில் நடைபெறும் அக்கிரமங்களை யவர்கள் மிகுதியும் தடைசெய்து வந்தனர். அவர்கள் செய்த வேலையை அங்குள்ள போலீஸ் சூப்பிரண்டெண்ட் மெச்சி ஸ்திரீபோலீசை அதிகமாக்குதற்பொருட்டு நகரக் கவுன்சிலுக்குச் சிபார்சு செய்தனர். கவுன்சில் வேறு 15 ஸ்திரீகளைப் போலீசில் சேர்த்துக்கொள்ளுமாறு உத்தரவு செய்திருக்கின்றது. இந்த ஸ்திரீபோலீசார் பலசாலிகளும் தீரமானவர்களுமாம். புருஷர்களைச் சாமர்த்தியமாகக் கைதுசெய்கின்றார்களாம்.

பூனைக்குப் பூஷணமிட்ட புண்யவதி.

சிதம்பரத்திலிருந்து திருமுட்டம் போகும் ரோட்டில் சிதம்பரத்துக்கு 4-வது மைல் பெரிய கீரைப்பாளையம் என்னுமூரில் நூறு ரூபாய்க்குப் பொன் கெடியார அட்டிகையொன்று புதிதாகச் செய்து தாங்கள் புத்திரர் போன்று வளர்த்துவந்த பூனைக் கணிந்தார்கள். மேற்படி பூனை அட்டிகையை அணிந்து கொண்டு அலங்காரமாக வீதிஉலாவப் புறப்பட்டு வீடுகள்தோறும் வழக்கம்போல் நுழைந்தது. கொடுக்கும்தெய்வம் கொண்டுவந்து கொடுக்கும் என்னும் பழமொழிக்கிலக்காக யாவரோ அதனைக்கொண்டு விட்டார்கள். ஷை பூனை தன்னை வளர்த்த எஜமான் வீடு வந்துசேர்ந்தது. எஜமானியும் எஜமானனும் பரக்க விழித்துப் பரிதவிக்கின்றார்கள். இது பூனைக்குப் பொன்னகையிட்டு அழகுபார்க்கும் நமது ஸ்திரீகளின் அறியாமையைப் பிரகாசப்படுத்துகின்றது.

புகையிலையின் பயன்.

புகையிலைச் சுருட்டுப் பிடித்தால் விஷக்கிருமிகள் செத்துப்போகின்றன. புகையிலைக் கைத்தொழிற் சாலையில் வேலைசெய்பவருக்குப் பெரும்பான்மையும் விஷபேதி யுண்டாவதில்லை. புகையிலை விஷபேதிக் கிருமிகளை ஒரு நிமிஷ நேரத்தில் கொல்லுஞ் சக்தியுடையதென்று ஒரு டாக்டர் கூறுகிறார்.

காலாற் சாப்பிடும் ஒரு ஸ்திரீ.

ஈஸ்ட்போர்ன் என்னுமிடத்தில் இரண்டு கைகளுமில்லாத ஸ்திரீ ஒருத்தி தனது கால் விரல்களாற் கரண்டிபிடித்துச் சௌகரியமாகச் சாப்பிடுகிறாளாம். சிலகாலத்திற்குமுன் அவ்வூரில் நடந்த பெரிய விருந்தொன்றில் இவள் பலரோடு இவ்விதம் சாதுர்யமாகச் சாப்பிட்டாளென்று சொல்லப்படுகிறது.

குருடர் பாடசாலைக்கு உதவி:—1913-14௵த்துக்கு பாளையங்கோட்டை குருடர்கள் பாடசாலைக்கு ரூ 100 உதவி செய்யவேண்டுமென்று டை பாடசாலை மானேஜர் கேட்டுக்கொண்டபடி தஞ்சை டிஸ்ட்ரிக்ட்போர்டார் ஸாங்ஷன் செய்தார்கள்.

தர்ம கைங்கரியங்களுக்காகத் தம்மிடம் சேர்ந்திருக்கும் பொருளைக்கொண்டு புதிய டில்லி ரயில்வேஸ்டேஷனுக்கருகில் லேடி ஹார்டிஞ்சு ஏழைப் பிரயாணிகளுக்கு ஒரு சத்திரம் கட்ட உத்தேசித்திருக்கின்றார்.

பொது நன்மைகள் பலவற்றிற்கும் தாராளமான பணவுதவி செய்துவரும் போபால் ராணி போபால் நகரில் மூன்று பெண்பாடசாலைகள் ஏற்படுத்தி நடத்த நான்கு லட்சம் ரூபாய் கொடுத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

தீக்குச்சி செய்வதற்குரிய மரங்கள்:—திருவாங்கூரிலுள்ள பலமரங்களைப் பரீக்ஷித்துப்பார்த்ததில் 41 தினுசுகள் குச்சி, பெட்டி இரண்டும் செய்ய லாயக்கானவையென்றும், அவற்றில் 18 தினுசுகள் மிகச் சிலாக்கியமென்றும், மற்றத் தினுசுகளில் 22, பெட்டி செய்வதற்கு மாத்திரம் தகுதியுள்ளவையென்றும், ஒன்று குச்சி செய்வதற்கு மாத்திரம் தகுதியுள்ளதென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஓர் சாதுர்ய கள்வன்—பம்பாயில் ஒரு பிரசித்திபெற்ற கள்வனொருவன் சமீபத்தில் பிடிக்கப்பட்டானாம். இவன் விசாரிக்கப்படுகையில் வெகு நாட்களாய் இவன் இத்தொழிலைச் செய்து வருவதாயும், இவன் திருடிய வஸ்துக்களை உடனே வாயில்போட்டு விழுங்கி வயிற்றினோர் பாகத்தில் வைத்திருந்து தனக்கு வேண்டியபோது கக்கி அதை வெளியே எடுத்துக்கொள்வானாம். இவ்விதம் செய்வதில் இவனுக்குயாதொரு சிரமமு மிருப்ப தில்லையாம். என்னே அதிசயம்.

ஓர் மனிதனை விழுங்கியபாம்பு:—சீனிப்பாகுவர்த்தகஞ்செய்யும் ஒரு வியாபாரி தன்வண்டியில் சீனிச்சர்க்கரைப்பாகை ஏற்றிக்கொண்டு ரங்பூர் என்றவிடத்திற்குப் போகப்புறப்பட்டு வழியில் அன்றிரவு ரங்பூர் ரெயில்வேஸ்டேஷனண்டை வண்டியை நிறுத்திவிட்டு நித்திரைபோனான். மறுநாள் ஆளைக்காணோமென்றும் வண்டிமட்டும் இருந்தவிடத்திலேயே இருக்கிறதென்றும் போலீஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. போலீஸார் அவனைத்தேடக் காட்டுவழியாகச் செல்லும்போது 21 அடி நீளமுள்ள ஒரு பெருத்தபாம்பு படுத்துகிடக்கக் கண்டார்கள். அந்தப்பாம்பு சுடப்பட்டது. பின்பு பாம்பின் வயிற்றைக் கிறிப்பார்க்க காணாமற்போனவர்த்தகனின் தேகம் வயிற்றிலிருக்கக் கண்டார்கள்.

எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனில் தீ விபத்து--தென்னிந்தியா ரேயில்வே எழும்பூர் ஸ்டேஷனில் ரெயில்வண்டிகள் நிற்குமிடத்தில் தீ விபத்து உண்டாயிற்று. சிற்றுண்டிகள் தயார் செய்யப்படும் சாப்பாட்டு வண்டியில் நெருப்பு! நெருப்பு! என்று கூச்சல் போடவே ஸ்டேஷன் சிப்பந்திகளும் டிஸ்ட்ரிக்ட் ட்ராபிக்சூபரின்டெண்டண்டும், அவ்விடத்திற்கு ஓடிவந்தார்கள். ஒரு இஞ்சின்வண்டி கொண்டுவரப்பட, எவ்வளவு வண்டிகளை தீ விபத்திலிருந்து அப்புறப்படுத்தக் கூடுமோ அவ்வளவு வண்டிகளை அது இழுத்துச்சென்று அப்புறப்படுத்திக்கொண்டிருந்தது. சாப்பாடு தயார் செய்யப்படும் வண்டியில் உண்டான தீ விபத்து பக்கத்திலிருந்த இரண்டுவண்டிகளிலும் கவர்ண்மெண்ட் இன்ஸ்பெக்டர் ஸலூனிலும் அதற்கடுத்திருந்த மூன்றாவது வகுப்பு போகி வண்டியிலும் பரவிற்று. பிறகு நெருப்பு அணைக்கும் யந்திரம் கொண்டுவரப்பட்டு நெருப்பு அணைக்கப்பட்டது என்றாலும், தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியைச் சேர்ந்த 5 வண்டிகள் எரிந்து சாம்பலாய்ப்போயின. சிற்றுண்டிகள் தயார் செய்யப்படும் வண்டியிலிருந்த ஒருவன் நெருப்பால் பாதிக்கப்பட்டான். அவன் ஜெனரலாஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டான்.

ஹௌராநகரில் ஸ.பொ என்னும் ஐரோப்பியன் தனது தோட்டத்தை வெட்டிக்கொண்டிருக்கையில் 39 பிஸ்தூல்கள் அடங்கிய ஓர் கட்டு கிடைத்தது. தோட்டத்துக்குள் பிஸ்தூல்கள் வந்த விதத்தைக் கண்டுபிடிக்கப் பிரயத்தினம் செய்கின்றனர்.

பரோடா மகாராஜா தமது பிறந்தநாள் கொண்டாட்ட தினத்தின் ஞாபகார்த்தமாய் தமது நாட்டிலுள்ள பாலகிகள் 10 வயதுவரையிலும், பாலர்கள் 14 ஆண்டுபரியந்தமும் பலாத்காரமாய் வித்யாப்யாஸம் செய்யும்படி ஏற்பாடு செய்திருப்பதுடன் திரவிய சகாயமும் புரிந்திருக்கிறார்.

கல்கத்தாவில் ஓர் நாளில் 5 பையன்கள் திருடினதாய்க் கைதுசெய்யப்பட்டார்கள். சிறுவர்களை விசாரித்துவருகையில் 14 வயதுள்ள பையன் உடையைச் சோதிக்கையில் சந்தேகமுண்டாயிற்று. போட்டிருந்த சொக்காயைக் களையவே பெண்ணாயிருக்க கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தார்கள். இந்தப்பெண் ஏற்கனவே இரண்டு குற்றங்களைச் செய்து தண்டனை பெற்றவளாம்.

ஓர் பெரியமோசம்— வடநாட்டிலுள்ள பரவூனெற இடத்தில் 60 வயதுள்ள ஓர் மகம்மதியன் 45 வயதுள்ள துலுக்கஸ்திரீயை மணக்க ஏற்பாடு செய்திருந்தான். முகூர்த்தநாள் வந்தது. மாப்பிள்ளை குதிரையிலேறி வாணம், தீபம், பந்து முதலியவர்கள் சூழ ஊர்கோலம் புறப்பட்டுக் கல்யாண மண்டபமடைந்து கன்னிகையைக் கைபிடித்தான். மகம்மதீய சாஸ்திரப்படி மணம் முடிந்தது. மனைவியுடன் நெருங்கிப் பேசுகையில் மணமகன் ஹோ! ஹோ! என்று கூச்சலிடான். எல்லோரும் ஓடிவந்து பார்கையில் மணமகள் கட்டைத்தடியனாய் மாறியிருந்ததைக் கண்டு வியப்புற்றார்கள். இந்த அதிசயத்தைக் கண்டவர்களெல்லாம் விதம்விதமாய் அபிப்பிராயம் கொடுக்கின்றனர்.

சாந்திரபுரமென்னும் ஊர்வடநாட்டிலுள்ளது. சில தினங்களுக்குமுன் ஒருவன் தன் மனைவியை அழைத்துவர மாமனார்வீட்டுக்குப் பிரயாணமானான். மார்க்கத்தில் ஏதோ வியாதிகண்டு மாணமடைந்தவனைப்போலானான். அருகிலிருந்தவர்கள் அவன் மனைவியின் வீட்டிற்கு இறந்த சமாச்சாரத்தைச் சொல்லியனுப்பினார்கள். முறைப்படி சிரார்த்த கர்மாதிகள் நடந்து பெண்ணின் தலையும் முண்டனம் செய்யப்பட்டது. இது நடந்த சில மாதங்கட்குப் பிறகு மாமனாரைக் காணவந்தான் மாப்பிள்ளை. மருமகனைக்கண்ட மாமிமாமன்கள் ஆச்சரியப்பட்டு நடந்த விஷயங்களைக் கூறினார்கள். முண்டமான மனவியை கேசம் வளர்த்துக் கொள்ளும்படி கட்டளையிட்டுத் தன வீட்டுக்கழைத்தேகினான் விப்பிரன். இது ஓர் கதையென்றே எல்லோரும் எண்ணியிருப்பார்கள்.

அக்கிரம வட்டி—கல்க்கத்தாவில் ஸ்மால்காஸ் கேஸ் ஒன்றில் 71 ரூபாய் முதலுக்கு 515 ரூபாய் வட்டிசேர்த்துத்தரவேண்டுமென்று வழக்கிடப்பட்டது ஜட்ஜ்வாதியை அழைத்து வட்டியைச் சற்றுக்குறைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டதற்கு 15 ரூ தளளி 500 ரூ வட்டி தரும்படி சொன்னானாம். ஜட்ஜூம் சட்டப்படி வேறுவழியில்லாமையால் 500 ரூ வட்டிக்கும் 71 ரூ முதலுக்கும் அதைக் கடன் பட்டவன் கொடுக்கவேண்டியதென்று தீர்ப்புசெய்தாராம். வட்டியில் நடக்கும் மோசங்கள் அநேகம். அதிலும் நாட்டுக்கோட்டை செட்டிகளிடத்தில் கடன் வாங்கி உருப்படுவதென்றால் வெகு கஷ்டம்! இவ்வித அக்கிரமங்களுக்கு இடங்கொடாமல் எவ்வித காரணத்தைக் கொண்டும் அசல் நூறு ரூபாய்கு வட்டி ரூபா நூற்றுக்கு அதிகப்படக்கூடாதென்று கண்டிப்பான உத்திரவைக் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தினால் நலமாயிருக்கும்.

நாய்ப்பிள்ளை ஒன்றை ஈன்றனளாம்—டேரியாவைச் சேர்ந்த டோலக் என்ற ஊரில் ஒரு பர்மியமாது ஒரு ஆண்குழந்தையைப் பெற்றாளாம். அக்குழந்தையின் தலை நாய்த்தலை போலவும், உடம்பெல்லாம் உரோமம் நிறைந்துமிருந்ததாம். அழுகுரல், நாய் குலைத்தலைப்போலு மிருந்ததாம். அது அடுத்தநாள் இறந்துவிட்டதாம். தாயும் மரணமாய் விட்டாள். இக்குழந்தை யுண்டானதற்குக் காரணம், அவள் நெடுநாள் விவாகமில்லாதிருந்ததாகவும். அவள் வீட்டு நாயொன்றினோடு எப்படியோ சம்பந்தப்பட்டுக் கர்ப்பமுண்டாய் விட்டதாகவும், அக்கர்ப்பமுண்டான மூன்று மாசத்திற்குப் பின் அவள் தாய் தந்தையருக்குத் தெரிந்து, ஒரு பர்மியனுக்கு அவளைக் கலியாணம் பண்ணிக் கொடுத்து விட்ட

தாகவும், அதன்பின் இச்சம்பவம் நிகழ்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. இதைக் குறித்து, அப்பெண்ணின் தாய் தந்தையர், மாந்தளேக்கு அடுத்த சிமஜூன் என்ற ஊருக்குக் குடிபோய்விட்டார்களாம்.

சம்பளமில்லாத பெண் பாடசாலைத் திறப்பு- பாபவினாசம் விக்டோரியா ஹைஸ்கூலுக்கெதிரில், போர்டாரால் இலவசப் பெண் பாடசாலை யொன்று திறக்கப்பட்டது. கலெக்டர் முதலிய அதிகாரிகள் வந்திருந்தார்கள். பெண்களுக்கு சிலேட்டு, பென்சில், மைக்கூடு முதலியவைகள் கொடுக்கப்பட்டன. சுமார் 40 பெண்கள் படித்ததாகத் தெரிகிறது.

பஞ்சாப் நதிகளிலுள்ள மீன்களை ஒருவரும் பிடிக்காது பாதுகாக்க பஞ்சாப் மாகாண சட்டசபையார் முன்பாக ஒரு மசோதா கொண்டுவர இந்தியாகவர்ன்மெண்டார் சம்மதித்துவிட்டனர்.

திருடர் உபாதை- ஜாஸ்திப்பெயர்களைப் போலீஸ் பந்தோபஸ்துச் செய்து வரும் இக்காலத்தில், விருதுப்பட்டியைச்சேர்ந்த முத்துராம்பட்டியிலிருக்கும் லுத்தர்மிஷன் பங்களாக் காம்பவுண்டில் அடிக்கடி திருடர் புகுந்து பல ரோதனைகள் செய்வதாய் முறைப்பாடாகியதைப் போலீசார் கவனித்துப் போக்கிரிகளைப் பிடித்துப் புத்தி புகட்டவேண்டும்.

அறிவிப்பு.

சென்ற இரண்டுவாரங்களாக வடதிருவிதாங்கூரில் சுற்றுப்பிரயாணம் செய்ததில் பத்திரிகைக்கு நூதன சந்தாதார்கள் அனேகர் சேர்ந்திருக்கிறார்கள். நமது பத்திரிகை விஷயமாகமிகுந்த அபிமானம் காட்டிய கொல்லம் சானிட்டரி ஓவர்ஸியர் ஸ்ரீமாந் சொக்கலிங்கம்பிள்ளையவர்களுக்கும், ஆலப்புழை ஸ்ரீமாந் குமாரசாமிப்பிள்ளையவர்கள், ஸ்ரீமாந் திருஆரியமுத்துப்பிள்ளையவர்கள் ஸ்ரீமாந் சுந்தரமய்யரவர்கள், ஸ்ரீமாந் ப. க. பழனியாபிள்ளையவர்கள முதலியவர்களுக்கும் நாம் மிக நன்றிபாராட்டுகின்றோம். அநேகர் பத்திரிகையை வாரப்பிரசுரமாக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். சித்திரை மீ 10-உ முதல் செங்கோட்டை, தென்காசி, திருநெல்வேலி, மதுரை, திருச்சினாப்பள்ளி முதலிய இடங்களுக்குப் போக நிச்சயித்திருப்பதால் அவ்விடங்களிலுள்ள பத்திரிகாபிமானிகளின் அபிப்பிராயத்தையுமறிந்து தீர்மானிக்கக்கருதியிருக்கிறோம். போதுமான உதவி கிடைக்கும் பட்சத்தில் பத்திரிகை விஷயமாக எவ்வித சீர்திருத்தஞ்செய்யவும் நாம் சந்நத்தராயிருக்கிறோம. சுற்றுப்பிரயாண நிமித்தம் சித்திரைமாதப்பத்திரிகை வைகாசி 10-உ-க்குமேல் வெளிவருமென்ற விஷயத்தையும் முன்னாகத் தெரிவிக்கிறோம்.

பத்திராதிபர்.